



Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 173 குரோதி வருடம், மாசி மாதம் 07ஆம் திகதி புதன்கிழமை (19.02.2025) ஹிஜ்ரி 1446, ஷஃபான் - 20, 0115 886187 - பக்கங்கள் 12 விலை ரூ.40




வரவு - செலவுத் திட்டத்தில் தாம் எதிர்பார்த்தபடி மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியாமல் போனதாக தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறி கவலைப்பட்டாராம் ஜனாதிபதி.

உள்ளூராட்சித் தேர்தலும் வருவதால் மக்களை எப்படி சமாளிப்பது என்பது குறித்து அரச மேல்மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகவும் தகவல்.

# இலங்கையில் தாக்குதல்!

## ஐக்கிய இராச்சியம் எச்சரிக்கை

Foreign & Commonwealth Office

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற அச்சத்தை நிராகரிக்க முடியாது என ஐக்கிய இராச்சியம் (UK) நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டுப் பிரஜைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பார்வை யிடும் இடங்களான ஹோட்டல்கள், பார்கள், உணவகங்கள் மற்றும் இரவு விடுதிகள், கடற்கரைகள், சுற்றுலாத் தலங்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள், பொது விடுமுறைகள், மத நிகழ்வுகள் மற்றும் பெரிய பொதுக் கூட்டங்கள் உள்ளிட்ட இடங்களில் கண்மூடித்தனமாக தாக்குதல்கள் நடத்தப்படலாம் என புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையில் பிரிட்டனின் வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் கூறியுள்ளது.


பிரிட்டிஷ் பிரஜைகள் நெரிசலான பொது இடங்களைத் தவிர்க்கவும் தங்கள் சுற்றுப்புறங்களைப் பற்றி எப்போதும் விழிப்புடன் இருக்கவும் உள்ளூர் ஊடக அறிக்கைகளுடன் புதுப்பித்த நிலையில் இருக்கவும் மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் ஆலோசனையைப் பின்பற்றவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்களில் நிலவும் மோதல்கள்... » 02 பக்கம்

## இலங்கை மீதான ஐ.எம்.எப். இன் தீர்மானம் 28இல்

இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட யோசனை, சர்வதேச நாணய நிதியத்தின் அளவுருக்களுக்கு எவ்வாறான வழிமுறைகளினூடாக சாதகத் தன்மையை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழு எதிர்வரும் 28ஆம் திகதி கூடவுள்ளது.

இதன்போது இலங்கை தொடர்பிலான மூன்றாவது மீளாய்வுக்கு அனுமதி கிடைத்தால் 333 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை அடைவதற்காக இலங்கையால் உள்நுழையக் கூடியதாக இருக்கும். அதற்கான வாய்ப்பு கிடைத்தவுடன் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 03 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான விரிவாக்கப்பட்ட கடன் வசதி வேலைத்திட்டத்தினூடாக இலங்கைக்கு கிடைக்கும் நிதித்தொகை 1,333 மில்லியன் டொலர்... » 02 பக்கம்



## பாண் விலை ரூ.10 ஆல் குறைப்பு

ஒரு இறாத்தல் பாணின் விலையை நேற்று (18) நள்ளிரவு முதல் 10 ரூபாவால் குறைப்பதற்கு பேக்கரி உற்பத்தியாளர்களின் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. » 02 பக்கம்



## நாட்டுக்கு பாதீடு அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும்!

### மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு

» 02 பக்கம்



### கிரிஷ் கொடுக்கல் – வாங்கல் வழக்கு;

## நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கிரிஷ் கொடுக்கல் - வாங்கல் ஊடாக 70 மில்லியன் ரூபாவை குற்றவியல் முறைகேடு செய்ததாக குறிப்பிட்டு, தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று (18) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. » 02 பக்கம்



## தே.ம.சவின் பயணப்பாதை அவர்களுக்கே தெரியவில்லை

### பூசகருக்கு தம்மபதமும் பைபிளும் மாறிவிட்டதாக ஹர்ஷ எம்.பி. சபையில் நக்கல் பேச்சு

"மக்கள் விடுதலை முன்னணி சோசலிஷத்தை நம்பினாலும் தேசிய மக்கள் சக்தியின்... » 02 பக்கம்

## சமநிலையின்மையே மின் துண்டிப்புக்கு காரணம்

### மின்சார சபையின் விசாரணைகளில் உறுதி

மின்சார உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலான சமநிலையின்மை காரணமாகவே, கடந்த 09ஆம் திகதி நாடு முழுவதும் திடீர் மின்தடை ஏற்பட்டதாக மின்சார சபை நேற்று (18) அறிவித்துள்ளது.

மின்வெட்டு தொடர்பான விசாரணையைத் தொடர்ந்தே மின்சார சபை தொடர்புடைய இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. » 02 பக்கம்



## மார்ச் 21க்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தலை நடத்துக!

### தேர்தல் ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை

» 02 பக்கம்



## அநுரவின் பாதீடு சிறுபிள்ளை எழுதிய கடிதம் போன்றது

### கடந்த ஆட்சிகளின் நீட்சி தொடர்வதாக உதய கம்மன்பில சுட்டிக்காட்டு

"ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாதீடானது, செலவு என்றால் என்னவென்று தெரியாதவர்களால் உருவாக்கப்பட்ட, சிறுவர்கள் எழுதிய கடிதத்தை போன்ற தொன்றாகும். 76 ஆண்டு சாபத்தை நிறைவு செய்வதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கங்கள் சென்ற அதே பாதையிலேயே... » 02 பக்கம்




### சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்காக

## ஒரு தீர்மானத்தை கொண்டுவர வேண்டும்

### சிங்கள மக்களும் அதனை ஏற்பார்களென சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



''வரவு - செலவுத் திட்டமானது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கானது. நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. ஆனால், 187 பேர் நீங்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து ஏகமனதாக வாக்களித்தனர். » 02 பக்கம்

## சமஷ்டி...

இந்த நாட்டில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை கொண்டு வருவதற்கு ஒரு தீர்மானத்தை கொண்டு வாருங்கள். இங்கே இருக்கின்ற பெரும்பாலானவர்கள் வாக்களிப்பார்கள். சிங்கள மக்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்பாக இந்த காலத்தை பயன்படுத்துங்கள்" என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் நேற்று (18) கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ரூ. 42,182 பில்லியன் செலவு ஏற்படுமென ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதில் வரவுக்கான வழிகள் என்ன என்பது குறித்து தெளிவாகக் கூறப்படவில்லை.

குறிப்பாக, இந்த 100 வீதமான செலவுகளில், ரூ.2,898.1 மில்லியன் 69 வீதம் நடைமுறை செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 31 வீதமானவை மட்டுமே அதாவது ரூ.1,320 பில்லியன் மட்டுமே முதலீடாகவுள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார ரீதியான வளர்ச்சி என்பதும் பொருளியல் ரீதியாக அந்நாடு முன்னேறுதல் என்பதும் நடைமுறைச் செலவைவிட மூலதனச் செலவின் ஊடாக அந்நாட்டின் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மொத்த வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவுகளுக்காக 10. 5 சுமார் 11 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் யுத்தமில்லை. ஆயுதங்களில் சரசரப்பு இல்லை. ஆனால் ரூ.442 பில்லியன்கள் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இம்முறை கல்விக்காகவும் சுகாதாரத்துக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் பாதுகாப்பு தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இன்னும் பல மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை. மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டநிலையில் இராணுவ பிரசன்னத்தோடு மிதமிஞ்சிய ஒரு இராணுவ ஆளணியோடு இருக்கின்ற இலங்கை 10 – 11 வீதமானதை இராணுவத்துக்கு ஒதுக்கியிருக்கின்றமை இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. அதனை நாங்கள் எதிர்க்கிறோம். அதற்கான எதிர்ப்பை இந்த இடத்தில் பதிவு செய்கிறோம்.

இந்நாட்டில் பொருளாதாரம் வளர வேண்டுமானால் இந்நாட்டில் இருக்கின்ற இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பலமாக்கப்படவேண்டும்.

வரவு - செலவுத் திட்ட முடிவுரையில், 'ஒன்றுபட்ட இலங்கை தூய்மையான இலங்கை, வளமான இலங்கை ஒரு வாய்ப்பை காண நான் விரும்புகின்றேன்' என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஒன்றுபட்ட இலங்கைக்குள் இருக்கின்ற தேசிய இனங்கள் தமிழ் தேசிய இனம், சிங்கள தேசிய இனம் மலையக தேசிய இனம், முஸ்லிம் தேசிய இனங்களின் இருப்புகள் எவ்வாறு பேணப்படும். அந்த ஒன்றுபட்ட இலங்கைக்குள் இவர்களுடைய தனித்துவ தன்மைகள் மொழிவாரியாக தமிழ் – சிங்கள தேசிய இனங்கள் ஒரு குடையின்கீழ் வரக்கூடிய வாய்ப்புகள் இந்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கிறதா உங்களுடைய காலத்தில் உருவாக்கப்படுமா? ஒரு தூய்மையான இலங்கையை காண நாங்களும் நீங்களும் கரங்களை கோர்த்துக்கொள்ள வேண்டும் என்றால் அந்நாட்டில் தூய்மையான எண்ணங்கள், சட்டங்கள், நடைமுறைகள் இருக்க வேண்டும். அந்த நடைமுறைகள் மக்கள் நம்பக்கூடிய நிலையில் அமைய வேண்டும். அவற்றை நீங்கள் எவ்வாறு உருவாக்கப் போகின்றீர்கள். ஒரு வளமான இலங்கையை கட்டியெழுப்ப இலங்கையின் வேர்களைக் கொண்ட புலம்பெயர்ந்தோரே வாருங்கள் என ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தற்போது ஒரு சக்தியாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். உங்கள் மீது அவர்கள் அபிமானம் கொண்டுள்ளனர். அவர்களுடைய வரவை ஜனாதிபதி விரும்புகிறார். ஆனால் இந்த மண்ணிலே நீண்டகாலமாக புரையோடிப் போயுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு இந்த அரசியலுள்ளோர் மறுக்கிறார்கள் – தயங்குகிறார்கள்.

ஒருகாலத்தில் சிங்கப்பூர், ஜப்பான், கொரியா உள்ளிட்ட நாடுகள் இலங்கையை விட நாங்கள் வளரவேண்டும் என நினைத்தார்கள். ஆனால் இலங்கை 1940களில் எவ்வாறு இருக்கின்றதோ அவ்வாறே இருக்கின்றது. ஆனால் இலங்கையைவிட வளர நினைத்த நாடுகள் இன்று இலங்கைக்கு கடன் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள். காரணம், அந்நாடுகளில் இருக்கின்ற ஒற்றுமையும் பலமும். சிங்கப்பூரில் தமிழும் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இந்நிலையில் புலம்பெயர்ந்தோரே வாருங்கள் என அழைக்கும்போது இந்நாட்டிலே தமிழர்களுக்குரிய அடிப்படை உரிமை, அரசியல் உரிமை அந்த தேசத்தில் அவர்கள் தங்களை தேசிய இனமாக அடையாளப்படுத்துகின்ற உரிமையை அந்த நாடு எவ்வாறு தரப்போகிறது என்ற எண்ணம் அவர்களிடம் இருக்கின்றது.

ஒரு வரவு - செலவுத் திட்டமானது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கானது. நாங்கள் அதனை எதிர்க்கவில்லை. ஆனால், 187 பேர் நீங்கள் கொண்டுவந்த தீர்மானத்துக்கு ஆதரவாக ஏகமனதாக வாக்களித்தனர். நீங்கள் ஒரு தீர்மானத்தை கொண்டு வாருங்கள். இந்த நாட்டில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை கொண்டு வாருங்கள். இங்கே இருக்கின்ற பெரும்பாலானவர்கள் வாக்களிப்பார்கள். சிங்கள மக்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள். அதற்கான வாய்ப்பாக இந்த காலத்தை பயன்படுத்துங்கள் என்றார்.

# உணவு வகைகளின் விலை அதிகரிப்பு



உணவகங்களிலுள்ள உணவு வகைகளின் விலை நேற்று (18) நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேநீரின் விலை 05 ரூபாவாலும் பால் தேநீரின் விலை 10 ரூபாவாலும் பிரைட் ரைஸ் பொதியின் விலை 30 ரூபாவாலும் சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் கூறியுள்ளது.

உணவு தயாரிப்புக்காக மூலப் பொருட்களின் விலை உயர்வே உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமென்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சமநிலையின்மையே...

இலங்கை மின்சார சபையின் பாணந்துறை மின் உற்பத்தி நிலையத்தில் மின்மாற்ற அமைப்பில் ஏற்பட்ட அவசர நிலைமை காரணமாக, கடந்த 09ஆம் திகதி பிற்பகல் தீவு முழுவதும் மின் தடை ஏற்பட்டது.

பல சூரிய மின் தகடு அமைப்புகள் துண்டிக்கப்பட்டதும் நுரைச்சோலை மின் நிலையத்தில் எதிர்பாராத விதமாக மின்சார பரிமாற்றம் செயலிழந்ததும் மின்சார கட்டமைப்பு மேலும் சீர்குலைத்துள்ளது.

அதன்படி, மின்சார அமைப்பை வலுப்படுத்த உடனடி மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மின்சார சபை அறிவிக்கிறது.

எதிர்காலத்தில் இதுபோன்ற மின்வெட்டு ஏற்படாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார வாரியம் பொதுமக்களுக்கு உறுதியளிக்கிறது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மீதான...

வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதிய பணிக்குழாம் மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையில், சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியினூடாக (ETT) ஒத்துழைப்பு வழங்கும் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வை நிறைவு செய்து பொருளாதார கொள்கை தொடர்பில் அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இடம்பெற்றது.

எது எவ்வாறாக இருந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தில் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய 333 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் அடுத்த தவணையில் இலங்கைக்கு விடுவிப்பதற்கு அதன்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன், அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவத்தினால் இந்த மீளாய்வுக்கு அனுமதி வழங்கவும் அதன் பின்னர் நாணய நிதியத்தின் நிறைவேற்றுக்குழுவினால் அதற்கு அனுமதியளிக்கவும் வேண்டியுள்ளது.

2025ஆம் ஆண்டுக்காக வரவு - செலவுத் திட்ட யோசனை நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் கவனம் செலுத்துவதற்காகவே நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவினால் இதற்கு அனுமதி வழங்குவதற்கு காலதாமதத்தை ஏற்படுத்தி வந்தது.

அதன்போது 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

அதில் "பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுதல் மற்றும் கடன் நிலைபேறுதன்மையை மீண்டும் அடைவதற்கு இலங்கையின் செழிப்பை பாதுகாப்பது அவசியம் என்பதுடன், பொறுப்புடன் அரச நிதி கொள்கையை செயற்படுத்த வேண்டும். நாணய நிதிய வேலைத்திட்டத்தின் நோக்கெல்லைக்கு அமைய 2025ஆம் ஆண்டுக்காக வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக தொடர்ச்சியாக அரச வருமானத்தை சேகரிப்பதற்கான முயற்சி மற்றும் செலவை மட்டுப்படுத்துவது அவசியமாகும். வருமான நிர்வாக மறுசீரமைப்பு மற்றும் வரி சதவீதத்தை மேம்படுத்துதலுக்கான முயற்சியில் ஏற்படும் சிக்கல் வரி செலுத்துபவர்களுக்கு ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வாய்ப்பை சமமாக பிரித்து விநியோகத்தை உறுதிபடுத்துவதற்கு அதிகபட்ச முயற்சியை எடுத்தல் வேண்டும். புதிய வரிகளை விடுவிப்பதை தவிர்த்துக்கொள்வதனூடாக வருமான இழப்பு மற்றும் ஊழலை குறைப்பதற்கும் சமூக செலவு உள்ளிட்ட செலவுகளுக்கு அவசியமாக அரச நிதி பாதுகாப்பை கட்டியெழுப்புவதற்கும் இலங்கையின் மிகவும் எச்சரிக்கை நிறைந்த குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு உதவியாக இருக்கும்" என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கையில்...

உலகம் முழுவதும் அதிக பதற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. அல்-கொய்தா மற்றும் டேஷ் போன்ற பயங்கரவாத குழுக்கள் மோதலுக்கு பதிலளிக்கும் வகையில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்த தங்கள் ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்த மோதல் தனிநபர்களை தாக்குதல் நடத்த தூண்டும்" என்று பிரிட்டனின் பயண ஆலோசனை கூறுகிறது.

தாக்குதல்கள் கண்மூடித்தனமாகவும் எச்சரிக்கை இல்லாமல் நிகழலாம் என்பதுடன் பயங்கரவாத தாக்குதல்கள் யூத அல்லது முஸ்லிம் சமூகங்களையோ அல்லது இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளின் நலன்களையோ குறிவைக்கலாம் என்று மேற்படி பயண ஆலோசனை கூறுகிறது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஈஸ்டர் ஞாயிறு அன்று, இலங்கையில் 03 தேவாலயங்கள் மற்றும் 03 ஹோட்டல்களுக்கு எதிரான பயங்கரவாத தாக்குதல்களில் கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் 08 பிரிட்டிஷ் பிரஜைகள் உட்பட 250க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக இங்கிலாந்து வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

## கிரிஷ் கொடுக்கல்...

சந்தேகநபரான பாராளுமன்ற உறுப்பினரை ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளிலும் விடுவிக்க மேல்நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டார்.

அத்துடன் பிரதிவாதியின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புடைய கோப்புகள் மேல்நீதிமன்றுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக நீதிபதி பகிரங்க மன்றில் அறிவித்தார்.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நிதிக்குற்றப்புலனாய்வு பிரிவின் விசாரணை அதிகாரிகள் மன்றில் ஆஜராகியிருந்ததுடன் அடுத்த வழக்கு நாட்களிலும் ஆஜராகுமாறு அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா ஆஜராகியிருந்ததுடன் பிரதிவாதியான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் உள்ளிட்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

## பாண் விலை...

அதற்கமைய, ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலை குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவை குறைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில், வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடனான கலந்துரையாடலின் பின்னர் கோதுமை மாவுக்கான விலையை குறைப்பதற்கு செரண்டிப் மற்றும் ப்ரீமா உள்ளிட்ட நாட்டிலுள்ள முதல்நிலையான கோதுமை மா உற்பத்தியாளர்களினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நேற்றிலிருந்து (18) நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கோதுமை மா விலை குறைக்கப்பட்டமைக்கான நன்மையை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக ஒரு இறாத்தல் பாணின் விலை 10 ரூபாவால் குறைப்பதற்கும் ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலையை குறைப்பதற்கும் பேக்கரி உற்பத்தியாளர்களின் சங்கத்தினால் வர்த்தக அமைச்சரிடம் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டுக்கு பாதீடு...

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்தின் பாதீடாக ஒருசிலர் அடையாளப்படுத்தினாலும் அது நாட்டுக்கு அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும் பாதீடாக அமைந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று (18) இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

2025ஆம் ஆண்டில் நூற்றுக்கு 05 சதவீத பொருளாதார வளர்ச்சியை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இந்த இலக்கை பார்த்தால் இம்முறை அதிக நம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள முடியும். 05 ரில்லியன் ரூபா வருமான இலக்கு மற்றும் 2.3 சதவீத முதன்மை எல்லையை எதிர்பார்த்தாலும் எனது எதிர்பார்ப்புக்கமைய அந்தளவுக்கும் அப்பால் சென்ற செயற்பாடாகும்.

அதேபோன்று அரச பத்திரங்களுக்காக குறுகிய காலத்தில் உருவாகும் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்பை ஏற்படுத்துவது அவசியமாகும். அதேபோன்று எமது நிதிக் கொள்கைக்கமைய நிலையான வட்டி சதவீதத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும்.

ஒருசிலர் கூறுவது போன்று நாணய நிதியத்தின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் பேசினால், பல வருடங்களாக நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களில் பங்குகொள்ளும் ஒருவர் என்ற அடிப்படையில் இம்முறை நாடு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக சரியான பாதையில் பயணிப்பதற்காக வெளித் தரப்பினருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளில் மாற்றம் ஏற்படாது. நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட்டாலும் ஒட்டுமொத்த பொருளாதாரக் கொள்கையின் திசையில் மாற்றம் ஏற்படாமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எனது நிலைப்பாட்டுக்கமைய இது கட்டாயம் இடம்பெற வேண்டிய விடயமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார ஸ்தரித்தன்மையை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தின் அளவுருக்களுக்கு ஏற்பட செயற்படுதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதுடன் இது நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்தும் வரவு-செலவுத் திட்டமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

## தே.ம.சவின்...

ஜனாதிபதி வேறு ஏதோவொரு வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இதிலுள்ள உள்ளடக்கம் என்னவென்பது எனக்கு புரியவில்லை. இவர்களின் பயணப் பாதை என்ன என்பது இவர்களுக்கே தெரியவில்லை. அவர்களின் பாதையை தவறவிட்டுவிட்டார்கள். இருந்தபோதும் பாதையை தேடுகிறார்கள்"என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்று (18) சபையில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புதிய அசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நேற்று முன்தினம் சபைக்கு முன்வைக்கப்பட்டது. அதன்போது ஜனாதிபதி என்னையும் சற்று சீண்டி பேசியிருந்தார். அவர் எனது நண்பர் என்பதால் அதில் எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இருக்கையில் நான் கோரும் விடயங்களை நிறைவேற்ற முடியாது.

விகாரையிலுள்ள தேரர் ஒருவரால் தேவாலயத்தில் பூஜை செய்ய முடியுமா? அது கடினமான விடயமாகும். இருந்தபோதும் சிலர் அதற்கு முயற்சிக்கலாம்.

ஆனால் நேற்று முன்தினம் இடம்பெற்றது முழுவதும் மாறுபட்ட விடயமாகும். நாடு பூராகவும் உலகம் பூராகவும் சென்று தவறு தவறு என்று கூறிவந்த, 75 ஆவது வருடங்கள் இடம்பெற்ற அழிவு என்றால் அதே திட்டங்களை எவ்வாறு முன்னெடுத்து செல்கிறார்கள். இதிலுள்ள மாற்றம் என்ன? எங்கே மாற்றம்.

அதனாலேயே பூசகருக்கு தம்மபதமும் பைபிலும் மாறிவிட்டதா என்று கேட்கிறோம். அவ்வாறு இல்லாவிட்டால் பூசகர் பைபிளை கைவிட்டு விட்டாரா? பைபிளில் ஒரு பகுதி தம்மபதத்தில் ஒரு பகுதி குர்ஆனில் ஒரு பகுதியை கருத்தில் எடுப்பது எவ்வாறு?

மக்கள் விடுதலை முன்னணி சோசலிஷத்தை நம்பினாலும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி முன்வைத்தது வேறு ஏதோவொரு விடயத்தையாகும். இதிலுள்ள உள்ளடக்கம் என்னவென்பது எனக்கு புரியவில்லை.

இவர்களின் பயணப் பாதை என்பது இவர்களுக்கே தெரியவில்லை. அவர்களின் பாதையை தவறவிட்டுவிட்டார்கள். இருந்தபோதும் பாதையை மறந்துவிட்டார்கள். குழம்பியுள்ளார்கள்.

கடவுள் அறிய தேர்தலுக்கு முன்னர் கூறியது பொய்யா? புரிதலுடனா வாக்குறுதி வழங்கினார்கள்? அல்லது அல்லல்படும் பொது மக்களை ஏமாற்றிவிட்டார்களா?

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்துக்கு செல்வதா இல்லையா என்பது தொடர்பில் ஆட்சியை பொறுப்பேற்றதன் பின்னரே தீர்மானித்ததாகக் கூறியிருந்தார்கள். அப்போதே நாங்கள் கூறினோம் கடன் நிலைபேறு பகுப்பாய்வை மாற்ற முடியாது என்று. ஆனால் இல்லை அதனை மாற்ற முடியும், மாற்றியே தீருவோம் என்றார்கள். வாழ்க்கைச் செலவை குறைப்போம் என்றார்கள். இயலுமானளவு சம்பளத்தை அதிகரிப்போம் என்றார்கள். வருமான வரியை குறைப்போம் என்றார்கள். ஜப்பானிலிருந்து மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்ய வாய்ப்பை ஏற்படுத்துவோம் என்றார்கள். ஆறு மாதத்துக்கு ஒரு முறை சம்பள அதிகரிப்பை மேற்கொள்வோம் என்றார்கள். தற்போது அழுவது யார் என்று தெரியவில்லை.

உழைக்கும்போது செலுத்தும் வரியை இரண்டு இலட்சம் ரூபா வரை அதிகரிப்போம் என்றார்கள். இல்லை முடியாது என்றோம். ஆனால், வரவு - செலவுத் திட்டத்தில் அதனை செய்து காட்டியுள்ளார்கள். டிசம்பர் 18ஆம் திகதி வரியை அதிகரித்துவிட்டு தற்போது வரி அதிகரிக்கவில்லை என்கிறார்கள். ஆனால் ஏப்ரல் மாதம் 01ஆம் திகதியிலிருந்தே வரி அதிகரிக்கிறது. இவர்கள் யாரை ஏமாற்ற முயற்சிக்கிறார்கள் என்றார்.

## அநுரவின்...

பயணித்துக்கொண்டிருக்கிறது. முழுமையாக அரசாங்கத்தின் இயலாமையையே இந்த பாதீடு வெளிப்படுத்தியுள்ளது" என்று பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம், செலவு என்றால் என்னவென்று தெரியாதவர்களால் உருவாக்கப்பட்ட சிறுவர்கள் எழுதிய கடிதத்தை போன்றதொன்றாகும். வரவு - செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் முன்வைக்கும் வருமான யோசனைகளை அடிப்படையாக கொண்டு அந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே பாதீட்டினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரவு - செலவுத் திட்டத்திலும் பற்றாக்குறையை பூர்த்தி செய்யக்கூடிய வருமான யோசனைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் வரலாற்றில் முதன் முறையான இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் எவ்வித வருமான யோசனையும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக வருமான அதிகரிப்பானது வருமான அதிகரிப்பு அல்லது வரி அதிகரிப்பிலேயே தீர்மானிக்கப்படுகிறது. இது அரசியல் ரீதியாக வெற்றியளிக்காத விடயம் என்பதால் வருமான யோசனைகளுக்கு இடையில் செலவு யோசனைகளை இணைத்துள்ளார்கள். ஆனால் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் முழுமையான செலவு யோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளதே தவிர எவ்வித வருமான யோசனையையும் அவதானிக்கக் கூடியதாக இல்லை.

இந்த வருடத்தில் அரச வருமானம் 929 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும் என்றும் வரவு - செலவுத் திட்டத்தில் கூறியுள்ளது. ஆனால் அது எவ்வாறு அதிகரிக்கும் என்பது தொடர்பில் பாதீட்டில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்தை தனது வேலைத்திட்டமாக காட்டிக்கொள்ளவும் அநுர முயற்சித்தார். 2024ஆம் ஆண்டின் இறுதியில் எமது அந்நிய செலாவணியை 06 பில்லியன் டொலர் வரையில் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளார். ரணில் விக்கிரமசிங்க பதவி விலகும்போதும் 5.9 பில்லியன் டொலர் இருப்பில் இருந்தது. அப்படியெனில், வருட இறுதியில் ஒன்றரை மாத காலப்பகுதியில் 0.1 பில்லியன் டொலரே சேமிக்கப்பட்டுள்ளது.

76 ஆண்டு சாபத்தை நிறைவு செய்வதாக கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் கடந்த அரசாங்கங்கள் சென்ற பயணத்தை அவ்வாறே முன்னெடுத்து செல்லும். எந்தவொரு புதிய வேலைத்திட்டங்களும் இல்லாமல், நாட்டை கட்டியெழுப்பக் கூடிய பொருளாதார நோக்கு இல்லாத அரசாங்கத்தின் இயலாமையை வெளிப்படுத்தும் வரவு - செலவுத் திட்டமாகவே இதனைப் பார்க்கிறோம் என்றார்.

## மார்ச்...

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதியின் பின்னர் ஆரம்பிக்குமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சியை சேர்ந்த பிரதான கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளன.

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தரப்பினர் நேற்று (18) தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்களான வி. இராதாகிருஷ்ணன், ரவூப் ஹக்கீம், நிசாம் காரியப்பர், சாணக்கியன் இராசமாணிக்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜே.சி. அலவதுவல மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.


இந்த சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்துத் தெரிவிக்கையில்,

வரவு - செலவுத் திட்ட விவாத காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டவாக்கத்துறையில் மேற்கொள்ள வேண்டி இருக்கும் பொறுப்புகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இடமளித்து மார்ச் 21ஆம் திகதியின் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும்.

நாங்கள் தேர்தலை காலந்தாழ்த்த முயற்சிப்பதாக சிலர் கூறுகிறார்கள். புதிதாக பாராளுமன்றத்துக்கு வந்தவர்களுக்கு இது மிகப்பெரிய விடயமாக தெரியாவிட்டாலும் சட்டவாக்கத்துறையில் இடம்பெறும் அரசியலமைப்பு ரீதியான கடமைகள், பொறுப்புகள் தெரிந்திருக்காவிட்டால் இதுதொடர்பில் சகலரும் அதிக புரிதலை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தேர்தல் ஆணைக்குழுவை ஒரு பொம்மையை போன்று அடையாளப்படுத்துவதற்கு அரசாங்கத்துடன் தொடர்புடைய ஒருசில தலைமைகள் செயற்பட்டிருக்கிறார்கள். தேர்தலை நடத்தும் திகதி, வேட்பு மனுக்களை கோருவதற்கான தினம், தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் கால எல்லை என்பவற்றை அரசாங்கத்தால் தீர்மானிக்க முடியாது. ஒருசிலர் இந்த செயற்பாடுகளை தவறுதலாக புரிந்துகொண்டுள்ளார்கள்.

# பாகிஸ்தான் வர்த்தகத் தூதுக் குழுவினர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுடன் சந்திப்பு




பாகிஸ்தானின் வர்த்தகத் தூதுக்குழுவினர் நேற்று (18) சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவைச் சந்தித்தனர். மருந்துத் தயாரிப்பு, உணவு, தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளைச் சேர்ந்த முன்னணி வர்த்தகர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி, தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் மொஹமட் முனீர் முலாபர், பாராளுமன்ற உறுப்பினர் சித்ரால் பெர்னாண்டோ, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, லாகூரில் உள்ள இலங்கைக் துதுவர் யாசின் ஜோய்யா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கும் அரசாங்கத்துக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் வணிகத் தூதுக்குழுவினர், நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அவற்றின் வெற்றிக்குத் தமது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்தனர். இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால வர்த்தக உறவுகளைச் சுட்டிக்காட்டிய அவர்கள், இரு நாட்டுக்கும் பரஸ்பர நன்மைகளை ஏற்படுத்தும் வகையில் இந்த உறவுகளை மேலும் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

வணிகச் செயற்பாடுகளுக்கு ஏற்ற நிலையான மற்றும் உகந்த சூழலை இலங்கை வழங்கி வருகின்றது என சபாநாயகர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என பாகிஸ்தானிய வர்த்தகக் குழுவுக்கு அழைப்பு விடுத்த சபாநாயகர், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய பாராளுமன்றங்களின் சங்கத்தின் ஆசிய மற்றும் தெற்காசிய பிராந்தியங்களின் முதலாவது ஒன்றிணைந்த மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றபோது வழங்கிய வரவேற்பையும் சபாநாயகர் நினைவுகூர்ந்தார்.

# ஜனாதிபதியின் செயலர் - சுகாதாரத்துறை பிரதானிகளுக்குமிடையில் கலந்துரையாடல்



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுகாதாரத்துறை பிரதானிகளுக்கு இடையில் நேற்று (18) ஜனாதிபதி அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அரச மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகளுக்காக அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் வரிசையில் காத்திருப்பதால், அந்த வரிசைகளைக் குறைக்க ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

இந்தக் குழு ஒரு மாதத்துக்குள் இது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதற்கேற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இருதய, கண், சிறுவர் நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட ஏராளமான நோயாளர்கள் அரச மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வரிசையில் காத்திருக்கின்றனர். அவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை சமாளிக்க ஜனாதிபதி நிதியம் மற்றும் ஏனைய துறைகள் மூலம் வழங்கக்கூடிய நிவாரணம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அரச மருத்துவமனைகளில் அலுவலக நேரத்துக்குப் பிறகு அறுவை சிகிச்சைகள் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

சுகாதார பிரதி அமைச்சர் முதித ஹன்சக விஜேமுனி, சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் டொக்டர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் (மருத்துவ சேவைகள்) வைத்தியர் லக்ஷ்மி சோமதுங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் எமது நாட்டின் பிரதான மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள், வைத்திய நிபுணர்கள் உள்ளிட்டோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்றத்தின் தமிழ்ப் பிரிவுக்கான ஊடக அலுவலக இணைப்பாளராக சிங்கராஜ் இளங்கோவன் தெரிவு



பாராளுமன்றத்தின் தமிழ்ப் பிரிவுக்கான ஊடக அலுவலக இணைப்பாளராக சிங்கராஜ் இளங்கோவன் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப் பட்ட இந்தப் பதவி நியமனமானது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

சமூக விஞ்ஞானத்துறை பட்டதாரியான சிங்கராஜ் இளங்கோவன் ஊடகத்துறையில் 20 வருடங்களுக்கும் மேல் அச்சு, ஒளி / ஒலி மற்றும் டிஜிட்டல் ஊடகத்துறையில் அனுபவம் பெற்றவர்.

இலங்கை ஊடகவியல் கல்லூரியில் ஊடகத்துறை டிப்ளோமாவை நிறைவு செய்துள்ள இவர், பூண்டுலோயா டன்சினன் கீழ்ப் பிரிவை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் டன்சினன் சிவானந்தா கல்லூரி, பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் ஹட்டன் புனித பொஸ்கோஸ் ஆண்கள் கல்லூரியின் பழைய மாணவரென்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் எம்.பி சாந்த அபேசேகரவும் அவரது மகனும் கைது

இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காரை மறைத்து வைத்திருந்த சம்பவத்தில் புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர மற்றும் அவரது மகன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு காரை பிரித்து மறைத்து வைத்திருந்த சம்பவம் தொடர்பாக கடந்த 06ஆம் திகதி நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, காரின் பல பாகங்களை பொலிஸார் கைப்பற்றினர்.

அதன்படி, சட்டவிரோத சொத்துகள் விசாரணைப் பிரிவு விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து, நேற்று (18) வாக்குமூலம் பதிவுசெய்ய சந்தேக நபர்கள் வந்தபோது கைதுசெய்யப்பட்டனர்.

# அரச பகுப்பாய்வாளர் துறையில் வளப் பற்றாக்குறை காரணமாக உணவு பாதுகாப்பு சோதனைகள் பாதிப்பு

### பொது சுகாதார ஆய்வாளர் சங்கம் சுட்டிக்காட்டு

அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் வசதிகள் இல்லாதது உணவு பாதுகாப்பு சோதனைகளை பாதிக்கிறது என்று பொது சுகாதார ஆய்வாளர்கள் (PHI) சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

உணவு சுகாதார தரத்தை பூர்த்தி செய்கிறது மற்றும் மனித நுகர்வுக்கு பாதுகாப்பானது என்பதை உறுதிசெய்வதற்காக மொத்தம் 6,000 உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

இருப்பினும், அரச பகுப்பாய்வாளர் துறையில் உள்ள குறைந்த வசதிகள் காரணமாக, உணவு மாதிரிகளை முறையாக சோதிக்க முடியவில்லை.

இந்நிலையில் சில முக்கியமான சோதனைகள் தாமதப்படுத்தப்பட்டன.

இதன் காரணமாக பொது சுகாதார பரிசோதனை ஆய்வுகள் பாதிக்கப்படுகிறது. சமீபத்திய நாட்களில், சில இரசாயனங்கள் பற்றாக்குறையால் சில காய்கறிகள் மற்றும் பழங்களில் பூச்சிக்கொல்லி சோதனைகளை முறையாக செய்யமுடியவில்லை.

மேலும், உணவு நுகர்வுக்கு பாதுகாப்பானது என்பதை உறுதி செய்ய, இரசாயன ஆய்வகங்கள் பராமரிக்கப்பட வேண்டும். எனவே சுகாதார அதிகாரிகள் இந்தப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# கைத்தொழில் வளர்ச்சியில் இலங்கை வங்கியின் உருமாறும் வகிபாகம்: இலங்கையில் தொழில்முனைவோர்களை வலுப்படுத்தும் நோக்குடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடனான மூலோபாய கூட்டு முயற்சி!

### கைத்தொழில் அபிவிருத்தி சபையின் (IDB) கைத்தொழில் தோட்டங்கள் பிரிவின் (Industrial Estates Division) பணிப்பாளர் சிறிமல் ஜயதிலக்கவுடனான நேர்காணல்

***இலங்கையில் கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின்(IDB) வகிபாகம் பற்றி உங்கள் கண்ணோட்டத்தை வழங்க முடியுமா?***

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திக்கும் அதன் வளர்ச்சிக்கும் பொறுப்பு கூறுகின்ற முன்னணி அரச அமைப்பாக கைத்தொழில் அபிவிருத்தி சபை திகழ்கின்றது. 1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி சபையானது கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக தொழிற்படுகின்றது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் முதல் பாரியளவிலான கைத்தொழில் துறைகளில் ஈடுபடுவோரின் பல்வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதில் கைத்தொழில் அபிவிருத்தி சபை தன்னை அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றது. அவர்களுக்கு தேவையான பரந்துபட்ட ஆதரவை இது வழங்குகின்றது. அனைத்து விதமான வணிகங்களும் தொழிற்றுறை பரப்புகளில் செழித்து வளர தேவையான வசதிகள், வளங்கள் மற்றும் வழிகாட்டுதலுக்கான அணுகலை உறுதி செய்கின்றது.

நாடு முழுவதிலும் காணப்படும் அனைத்து கைத்தொழில்கள் அபிவிருத்தியை முன்னெடுத்துச் சென்று, உறுதியான தன்னிறைவு மிக்க கைத்தொழில் துறையைக் கட்டியெழுப்புவதே கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தொலைநோக்காகும். இந்த நோக்கை யதார்த்தமாக்குவதற்காக, இலங்கைக் கைத்தொழில்களின் வளர்ச்சி மற்றும் நிலைபேறான தன்மைக்கு அவசியமான மூலோபாய, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடித்தளத்தை வழங்குவது அதன் பணியாகும்.

நிதி அடிப்படையிலான வெற்றியை நோக்கி செயற்படும் அதேவேளை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைபேறான கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதே கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மூலோபாய இலக்காகும். கைத்தொழில் விரிவாக்கம், புத்தாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பனவற்றுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம், நாட்டின் கைத்தொழில்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் உலக சந்தையில் அவற்றின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துவதிலும் கைத்தொழில் அபிவிருத்தி சபை முக்கிய வகிபாகமொன்றை வகித்து வருகின்றது.

***சொந்தமாக வணிகத் திட்டங்களை வைத்திருப்பவர்களுக்கும் சொந்தமாக நிறுவனத்தைத் தொடங்க விரும்பும் தனிநபர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபை எவ்வாறான ஆதரவை வழங்கி ஊக்குவிக்கின்றது? அத்துடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் ஒருவர் எவ்வாறு தன்னை இணைத்துக் கொள்ள முடியும்?***

கைத்தொழில் அபிவிருத்தி சபை தமது சொந்த வியாபாரத்தை ஸ்தாபிக்க விரும்பும் தொழில்முனைவோருக்கு வழிகாட்டுவதிலும் ஆதரவளிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. உங்களிடம் நன்கு கட்டமைக்கப்பட்ட வணிகத்திட்டம் அல்லது அதற்கான யோசனை இருப்பின், வெற்றிகரமானதொரு தொழில் முயற்சியாக அதனை மாற்றிக்கொள்வதற்கு உதவும் பலவிதமான சேவைகளை கைத்தொழில் அபிவிருத்தி சபை வழங்குகின்றது.

ஆர்வமுள்ள கைத்தொழிலதிபர்களுக்கும் தொழில்முனைவோர்களுக்கும் தேவையான வசதிகளை அளிப்பதற்காக தொழில்நுட்ப வழிகாட்டல், நிதி ஆலோசனை சேவைகள் மற்றும் வியாபார அபிவிருத்தி உதவிகள் உள்ளிட்ட விரிவான பரந்துபட்ட திட்டங்களை கைத்தொழில் அபிவிருத்தி சபை வழங்கி வருகின்றது. மூலோபாய பங்குடைமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கைத்தொழில் அபிவிருத்தி சபை கைத்தொழிலில் ஆரம்ப நிலையில் இருக்கும் நிறுவனங்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் நிதி சார்ந்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்காக இலங்கை வங்கியுடனான குறிப்பிடத்தக்க பங்களிப்பு உட்பட பல்வேறு நிறுவனங்களுடன் ஸ்திரமான ஒத்துழைப்பை நிறுவியுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து செயற்படவும் அதன் வளங்களை அணுகவும் விரும்புவோர் எமது இணையத்தளத்துக்குள் பிரவேசித்து எமது சேவைகள், திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். எமது இணையத்தள முகவரி www.idb.gov.lk <http://www.idb.gov.lk/>. எமது மாவட்ட அலுவலகங்களில் தொழில்முனைவோர்களுக்கு தேவைப்படுகின்ற தனிப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அலுவலர்கள் உள்ளனர். கைத்தொழில் அபிவிருத்தி சபை இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக இயங்கி வருகின்றது. நேரடி விசாரணைகளுக்கு தனிநபர்கள் தொலைபேசி வழியாகவும் அணுகலாம். அங்கு அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் விசாரணைகள் தொடர்பாக பதிலளிப்பதற்கும் வணிகத்தைத் தொடங்குவதற்கும் அதனை சரியான முறையில் ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் தொழில்முறை ரீதியிலான ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள்.

கைத்தொழிலதிபர்களை பல்வேறுபட்ட நிறுவனங்களுடன் ஒன்றிணைப்பதற்கான விரிவான முயற்சியொன்றை கைத்தொழில் அபிவிருத்தி சபை மேற்கொண்டுள்ளது. உறுதியான மற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையுடன் இலங்கையின், தொழிற்றுறை வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதற்கு தொழில்முனைவோர்களை வலுப்படுத்தி அவர்களின் வணிகத்தை அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை தொடர்ந்தும் வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது.

***கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் இலங்கை வங்கிக்கும் இடையிலான ஒத்துழைப்பு பற்றி விரிவாகக் கூற முடியுமா? கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு ஆதரவளிப்பதில் இலங்கை வங்கி எவ்வாறான வகிபாகத்தைக் கொண்டிருக்கின்றது? இந்த கூட்டு ஒத்துழைப்பு முயற்சி கைத்தொழிலதிபர்களின் வெற்றிக்கு எவ்வாறு பங்களிக்கின்றது?***

கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இலங்கை வங்கியும் இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட மூலோபாய பங்குடைமையொன்றைப் பகிர்ந்துகொள்கின்றன. வணிக ஸ்தாபனம் மற்றும் வளர்ச்சியை எளிதாக்குவதற்கான அத்தியாவசிய ஆதரவை வழங்குவதன் மூலம் இந்த செயற்பாடுகள் இடம்பெறுகின்றது. குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் (SME) துறையில் உள்ள தொழில் உரிமையாளர்களை வலுப்படுத்துவதில் இந்த ஒத்துழைப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது.

தொழில் வளர்ச்சியின் இந்த கூட்டுப் பயணத்தில், வெற்றிகரமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு ஆறு அடிப்படைக் காரணிகள் முக்கியமானவை. அவையாவன, 01. நிதி, 02. தொழில்நுட்பம், 03. சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை, 04. சிக்கனம் மற்றும் ஸ்திரத்தன்மை 05. தொலைநோக்கு, 06. இலக்கு மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு.

இவற்றில், தொழில் உபாயங்கள், வணிக உத்திகள், சந்தை அணுகல் மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டல் ஆகியவற்றை வழங்கும் விரிவான வள மையமாக கைத்தொழில் அபிவிருத்தி சபை செயற்படுகின்றது. எவ்வாறிருப்பினும், மிக முக்கியமான காரணியான நிதி ஆதரவு அதன் நோக்கத்துக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. இந்த இடத்தில் தான் இலங்கை வங்கி அவ்வெற்றிடத்தை நிரப்புவதிலும் நிதி வளங்கள் கைத்தொழிலதிபர்கள் அல்லது உரிமையாளர்களினால் அணுகக் கூடிய விதத்தில் மாற்றப்படுவதிலும் ஒரு பெரும் வகிபாகத்தை வகிக்கின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றுக்கிடையிலான முக்கிய இணைப்பு SME வலையமைப்பினூடாக நிறுவப்பட்டுள்ளது. இது வழக்கமான நிதி உதவிகளுக்கு அப்பால் விரிவுபடுத்த வடிவமைக்கப்பட்ட ஒரு சேவையாகும். இலங்கை வங்கி ஒரு முன்னணி நிதி நிறுவனம் என்ற வகையில், தொழில்முனைவோர்களுக்கு மூலதன மற்றும் நிதித் தீர்வுகளை வழங்குவதுடன், அவர்கள் தமது கைத்தொழில்களை ஆரம்பித்து விரிவுபடுத்திக் கொள்ளவும் உதவுகின்றது. வணிகங்களுக்கு தேவையான நிதி ஆதரவை வழங்குவதனை உறுதிப்படுத்துவதன் மூலம், இலங்கை வங்கி நிலையான தொழிற்றுறை வளர்ச்சிக்கு வழியேற்படுத்திக்கொடுத்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை வங்கிக்கு இடையேயான இந்த கூட்டு முயற்சி வெறுமனே ஒரு நிதிப் பரிவர்த்தனை அல்ல. இது வெற்றியை நோக்கிய ஒரு கூட்டுப் பயணமாகும். கைத்தொழிலதிபர்களையும் உரிமையாளர்களையும் வலுப்படுத்துவதற்காக பகிரப்பட்ட அர்ப்பணிப்பினூடாக கைத்தொழில் அபிவிருத்தி வங்கியானது மூலோபாய மற்றும் தொழில்நுட்ப அடித்தளத்தை வழங்குகின்ற அதேவேளை, நிதி சார்ந்த தடைகளை நீக்கி, வியாபாரங்கள் செழித்து வளர இலங்கை வங்கி உதவுகின்றது. இந்த இரண்டு நிறுவனங்களும் ஒன்றிணைந்து இலங்கையில் நெகிழ்திறன் மிக்க மிகவும் முற்போக்கானதொரு கைத்தொழில்துறையை உருவாக்கும் கூட்டிணைவான சூழலை உருவாக்குகின்றன.

***சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் இலங்கையின் தொழிற்றுறை அபிவிருத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றி உங்கள் கருத்து என்ன?***

எனது வாழ்வில் சுமார் முப்பது வருடங்களை கைத்தொழில் அபிவிருத்தி சபையுடன் இணைந்து பணியாற்றுவதற்காக அர்ப்பணித்துள்ள நான், இலங்கையின் கைத்தொழில் பரம்பலை வடிவமைப்பதில் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சியாளர்களின் பங்களிப்பு மற்றும் அந்த தாக்கத்தின் சக்தியை நேரடியாக அவதானிக்கின்றேன். பாரம்பரியமாக ஒரு வங்கியின் பங்கு ஒரு தொழிற்றுறைக்காக நிதி உதவிகளை வழங்குவதாகும். எவ்வாறாயினும், இவ்விடயத்தில் இலங்கை வங்கியை வேறுபடுத்திக் காட்டுவது அதன் செயலூக்கம் மிக்க அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறைகள் யாவும் வெறுமனே கடன்களை வழங்குவதற்கு அப்பால் நீட்சி பெறுகின்ற சிறப்பான திட்டங்களாக உள்ளன.

ஒரு தொழில்முயற்சியாளர் நிதி உதவியை நாடி வரும் வரை இலங்கை வங்கி காத்திருப்பதில்லை. அதற்கு பதிலாக, கடன் வழங்கப்படுவதற்கு முன்பே முழுமையான அடித்தளத்தை வழங்குவதன் மூலம் நிறைவானதொரு மற்றும் முன்னோக்கிய அணுகுமுறையை பின்பற்றுகின்றது. இது நிதி நம்பகத்தன்மை, வணிக ஸ்திரத்தன்மை மற்றும் ஒரு தொழில்முயற்சியாளர் எதிர்கொள்ளக்கூடிய சாத்தியமான சவால்கள் பற்றிய மிகவும் உன்னிப்பான மதிப்பீட்டை உள்ளடக்கியது. வங்கி இவ்விடயத்தில் மேலதிகமாக பல மைல்கள் தூரம் முன்னோக்கிப் பயணிக்கின்றது. வணிகங்கள் நன்கு திட்டமிடப்படுவதனால் நீண்ட கால வெற்றிக்கான அத்திவாரத்தை அது உறுதி செய்கின்றது.

இந்த முயற்சியின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று, இலங்கை வங்கி ஒரு விரிவான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் வலையமைப்பை உருவாக்கியுள்ளமையாகும். ஆரம்ப நிலை நிதி உதவி முதல் கடனுக்கு பிந்திய நிதி கண்காணிப்பு வரை ஒவ்வொரு கட்டத்திலும் தொழில் உரிமையாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்கியுள்ளது. கடன் வழங்கப்பட்ட பிறகும் வங்கி தீவிரமாக அவர்களுடன் இயங்குகின்றது. வணிகங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், சவால்களை அடையாளம் காணுதல் மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டுதல் போன்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. கைத்தொழில் அபிவிருத்தி சபையை பொறுத்தவரை இந்த கட்டமைக்கப்பட்ட மற்றும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட ஆதரவு ஒரு விலைமதிப்பற்ற சொத்தாகும்.

இலங்கை வங்கியின் ஆதரவுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்முயற்சியாளர்கள் என்ற எண்ணக்கரு தொழில் உரிமையாளர்களுக்கு ஒரு உறுதியான அத்திவாரத்தை வழங்கியுள்ளது. அவர்கள் நிதி ஆதரவைப் பெறுவது மட்டுமல்லாமல் மூலோபாய மற்றும் செயற்பாட்டு ரீதியிலான ஆதரவையும் பெறுவதனை உறுதி செய்கின்றது. இந்த கூட்டு முயற்சி ஒரு செழிப்பான தொழிற்றுறையை வளர்த்தெடுத்துள்ளது. இது ஒரு உறுதியானதும் மிகவும் பயனுள்ளதுமான ஓர் கூட்டு முயற்சியாக உள்ளது.

இந்த முயற்சியின் மூலம், இலங்கை வங்கி ஒரு நிதி நிறுவனமாக மட்டுமன்றி, தொழிற்றுறை முன்னேற்றத்தின் ஓர் உண்மையான பங்காளியாக புதியதொரு அளவுகோலை அமைத்துள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை வங்கிக்கு இடையிலான இந்த ஒத்திசைவான உறவு, நிலையான தொழிற்றுறை வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழி வகுத்துள்ளது. வணிகங்கள் வெறுமனே தொடங்கப்படுவது மட்டுமல்லாமல், நீண்டகால வெற்றி இலக்கினை நோக்கி அவை நகர்வதனையும் உறுதி செய்கின்றது.



***இளம் தொழில்முனைவோர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு வழிமுறையாக இலங்கை வங்கி இளையோர் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. உங்கள் பார்வையில் இந்த முன்முயற்சி எவ்வாறான முக்கியத்துவத்தைப் பெறுகின்றது? இது இலங்கையின் தொழிற்றுறை வளர்ச்சிக்கு எவ்வாறு பங்களிக்கின்றது?***

இளம் தொழில்முனைவோர்கள் விழிப்புணர்வையும் பொறுமையான உணர்வையும் தம்மகத்தே கொண்டுள்ளனர். அவர்கள் தவறாக வழிநடத்தப்படுவதனை விரைவாக அடையாளம் காண்கின்றார்கள். காலாவதியான அமைப்புகளை விரைந்து கேள்விக்குட்படுத்துகின்றார்கள். பெரும்பாலும் மாற்றத்தைத் தூண்டும் புதிய முயற்சிகளைத் தொடங்குகின்றார்கள். கைத்தொழில் அபிவிருத்தி சபையினரான நாம் கைத்தொழில் முன்னேற்றத்தின் மூலமே உண்மையான தேசிய அபிவிருத்தியை அடைய முடியும் என உறுதியாக நம்புகின்றோம். இருப்பினும், பல ஆண்டுகளாக தொழில்களுக்கு தேவையான ஆதரவு கிடைக்கவில்லை. இது ஒரு பயனுள்ள தீர்வுக்கான பெரும் இடைவெளியை உருவாக்கியது.

இலங்கை வங்கியின் இளைஞர் கடன் என்ற திட்டம் இந்த சவாலுக்கு ஒரு சக்திவாய்ந்த பதிலாக உருவெடுத்துள்ளது. ஆயினும் கூட இந்த முயற்சியை வேறுபடுத்துவது என்னவென்றால், இது வெறுமனே ஒரு கடன் திட்டம் அல்ல. இலங்கை வங்கி தொழில்முனைவோரை வளர்ப்பதற்கும் அவர்களின் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கும் நிதியளிப்பதைத் தாண்டிச் சென்று செயற்படுகின்றது. நிதி உதவி பெறும் இளைஞர் யுவதிகள் கடன் வாங்குபவர்கள் மட்டுமல்ல, எதிர்கால தொழிற்றுறை தலைவர்கள் என்பதை உறுதிப்படுத்த வங்கி ஒரு ஸ்திரமான அணுகுமுறையை பின்பற்றுகின்றது. இந்த முயற்சியின் மூலம் இலங்கை வங்கி ஒரு புதிய தலைமுறை தொழில்முயற்சியாளர்களை உருவாக்குகின்றது. அவர்களில் சிலர் ஏற்கெனவே ஏற்றுமதி தரத்தை அடைந்துள்ளனர். மற்றவர்கள் அந்தந்த துறைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளனர். இளம் கண்டுபிடிப்பாளர்கள், கைத்தொழிலதிபர்கள் மற்றும் வணிக தொலைநோக்காளர்களை வலுப்படுத்துவதற்கான அவசரத் தேவையை நிவர்த்தி செய்யும் ஒரு முக்கியமான தருணத்தில் இளைஞர் கடன் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிதி ஆதரவை மாத்திரமல்லாமல் மூலோபாய ஆதரவு மற்றும் வழிகாட்டல்களையும் வழங்குவதன் மூலம் இந்த இளம் தொழிற்முயற்சியாளர்கள் வெறுமனே தொழில்களை ஆரம்பிப்பது மட்டுமல்லாமல் நிலையான மற்றும் செழிப்பான கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதை உறுதி செய்வதில் இலங்கை வங்கி முக்கிய பங்கு வகித்துள்ளது.

***கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் என்ற முறையில் சொந்தமாக தொழில் தொடங்க திட்டமிடும் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கு நீங்கள் என்ன ஆலோசனை கூற விரும்புகின்றீர்கள்?***

ஒரு தொழிலைத் தொடங்குவது என்பது ஒருபோதும் குறுகிய கால நிதி அபிலாஷைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது. அது ஒரு தெளிவான பார்வை மற்றும் நீண்ட கால தொழிற்றுறை மூலோபாயத்தினால் இயக்கப்படல் வேண்டும். ஒரு வெற்றிகரமான வணிகம் ஒரு வணிக முயற்சி மட்டுமல்லாமல் அது பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்புகளுக்கான உருவாக்கம் மற்றும் புதிய தொழிற்றுறை கண்டுபிடிப்புகளுக்கு பங்களிக்கும் ஒரு செயற்பாடாக உள்ளது. ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு தொழில்முயற்சியாளர் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். நன்கு ஆராயப்பட்டு கட்டமைக்கப்பட்ட தொழில் திட்டம், சந்தை மாற்றங்கள் பற்றிய தெளிவான புரிதல், வரைமுறைகள் பற்றிய ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள் பற்றிய அறிவு, தொழிற்றுறைக்கு தேவையான தொழில்நுட்பம் பற்றிய பரந்துபட்ட அறிவு இருத்தல் என்பனவும் அவசியமாகும்.

சில நேரங்களில் குறைந்தபட்ச திறமைகளுடன் மேற்கொள்ளக் கூடிய விவசாயத்தைப் போன்றல்லாமல், வணிகம் மற்றும் தொழிற்றுறைக்கு விரிவான ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. தொழில்முனைவோர்கள் மிகவும் உன்னிப்பான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு நிலையான செயற்பாட்டு மாதிரியை உருவாக்க வேண்டும் மற்றும் சந்தைத் தேவைகளுடன் தங்கள் வணிக உத்திகளைப் பொருத்திக்கொள்ளக் கூடியவாறு அவற்றை சீரமைக்க வேண்டும்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையினராகிய நாம், புதிய வணிகங்கள் ஒரு வலுவான அடித்தளத்தை நிறுவ உதவுவதற்கு தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவம், சந்தை நுண்ணறிவு மற்றும் ஒழுங்குமுறை வழிகாட்டல் ஆகியவற்றை வழங்கி வருகின்றோம். இளம் தொழில்முனைவோருக்கு நான் வழங்கும் ஆலோசனை மிகவும் எளிமையானது. நன்கு வடிவமைக்கப்பட்ட திட்டமிடல்கள் இல்லாமல் ஒரு போதும் வணிக பயணத்தை மேற்கொள்ள வேண்டாம். சரியான திட்டமிடல் பின்னடைவுகளைத் தடுக்கின்றது. ஆபத்தைக் குறைக்கின்றது. சிறப்பான வளர்ச்சியையும் வெற்றியையும் நோக்கி கட்டமைக்கப்பட்ட பாதையை உறுதி செய்கின்றது.

***உங்கள் அபிப்பிராயத்தில், நிதிச் சேவைகள் தொடர்பாக இலங்கை வங்கியின் தற்போதைய அணுகுமுறைகள் பாரம்பரிய வங்கித்தொழிலுக்கு அப்பால் எவ்வாறு விரிவடைந்துள்ளது என்று கருதுகின்றீர்கள்?***

பாரம்பரியமாக ஒரு வங்கியின் முதன்மைப் பணி கடன்களை வழங்குவதும் அவற்றை திருப்பி அறவிடுவதுமாகவே அமைகின்றது. இருப்பினும், இன்றைய நவீன பொருளாதார சூழலில் இந்த பாரம்பரியமான மாதிரி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இல்லை. ஒரு நிதி நிறுவனம் மூலதனத்தை வழங்குவதை விட அதிகமாகப் பணியாற்ற வேண்டியுள்ளது. அது கடன் பெறுபவர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். அவர்களை வலுவான மற்றும் தன்னிறைவு பெற்ற தொழில்முனைவோர்களாக மாற்ற வேண்டும்.

தனது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் வலையமைப்பினூடாக இலங்கை வங்கி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பால் தொழில் உரிமையாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட புத்தாக்கக் கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி வணிகங்களை வளர்த்தல், தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் மற்றும் நீண்டகால ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது. ஆலோசனை சேவைகள், நிதி மற்றும் மூலோபாய தலையீடுகளை வழங்குவதன் மூலம் தேவைப்படும் முக்கியமான தருணங்களில் தொழில் உரிமையாளர்களுக்கு உதவுவதன் மூலம் வங்கி ஒரு நம்பிக்கையான பங்காளராக செயலாற்றுகின்றது.

ஒரு வலுவான தொழிலதிபர் ஒரு நிலையான வணிக சுற்றுச்சூழலை உருவாக்குவதுடன், அதன் மூலம் நெகிழ்திறன் கொண்ட தேசிய பொருளாதாரத்தையும் உருவாக்குகின்றார் என்பதை இலங்கை வங்கி புரிந்துகொண்டுள்ளது. தொழில்முனைவோருக்கு நிதி சார்ந்த வலிமையை வழங்குவதன் மூலம் இலங்கை வங்கி ஸ்திரத்தன்மையை பலப்படுத்துகின்றது. தொழில் உரிமையாளர்கள் மற்றும் நாட்டின் பொருளாதாரம் இரண்டும் ஒன்றிணைந்து வளர்வதை உறுதி செய்கின்றது.

குறிப்பாக இலங்கை வங்கி இளையோர் கடன் திட்டம் இந்த தத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. இது ஒரு கடன் மட்டுமல்ல இளம் தொழில்முயற்சியாளர்களுக்கான அடித்தள ஆதரவு அமைப்பாகும். இந்த முயற்சி இலட்சியத்துக்கும் சாதனைக்கும் இடையே ஒரு பாலமாக செயற்படுகின்றது. இளம் வணிக உரிமையாளர்கள் தங்கள் கனவுகளை நனவாக்க பேருதவி புரிகின்றது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 பெப்ரவரி, 19ஆம் திகதி, புதன்கிழமை

# பட்ஜெட் சொல்லும் செய்தி !

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு-செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 11 வீதமானதை இராணுவத்துக்காக ஒதுக்கியிருப்பது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல எனவும் இதனை எதிர்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்,நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

''இந்த அரசாங்கத்தினுடைய முதலாவது வரவு-செலவுத்திட்டத்திலே 4218.2 பில்லியன் ரூபா செலவு ஏற்படுமென சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான வரவுக்கான வழிகள் என்ன என்பது குறித்து தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக, இந்த செலவுகளிலே ரூ.2898.1 மில்லியன் 69 சதவீதமானவை நடைமுறைச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 31 சதவீதமானவை மட்டுமே முதலீடுகளாக இருக்கின்றன.

பாதுகாப்புச் செலவாக மொத்த வரவு-செலவுத் திட்டத்திலே கிட்டத்தட்ட 11 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டிலே யுத்தம் இல்லை; சண்டை இல்லை; ஆயுதங்களுடைய சலசலப்புகள் இல்லை. ஆனால் 442 பில்லியன் ரூபா பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இம்முறை சுகாதாரத்துக்காக, கல்விக்காக ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இருந்தாலும் கூட பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது.

நாட்டிலே இன்னும் பல மக்கள் குடியேற்றப்படவில்லை; மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படவில்லை; தமிழர் நிலங்கள் அபகரிக்கப்பட்ட நிலையிலேயே இராணுவ பிரசன்னங்களோடு – மிதமிஞ்சிய இராணுவ ஆளணியோடு இருக்கின்ற இலங்கை, 11 வீதமானதை இராணுவத்துக்காக ஒதுக்கியிருப்பது இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததல்ல. இதனை நாங்கள் எதிர்க்கின்றோம். இந்த நாட்டினுடைய பொருளாதாரம் வளரவேண்டுமென்றால் இங்கிருக்கின்ற இனங்களுக்கிடையில் ஒற்றுமை பலமாக்கப்பட வேண்டும்" – என்று சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

''இலங்கையின் எல்லா ஆட்சியாளர்களும் பாதுகாப்புத்துறைக்கு அதிகபட்ச நிதியை ஒதுக்குவதைக் கொள்கையாகவே கொண்டுள்ளனர். உள்நாட்டுப் போரின்போது அதற்கு நியாயம் கற்பிக்கப்பட்டாலும் மோதல்கள் இல்லாத ஒரு காலத்தில் கோடிக்கணக்கான நிதியை ஒதுக்குவதென்பது எந்தவகையில் ஏற்றுக்கொள்ள முடியும்?

நாட்டின் பொருளாதார நெருக்கடியென்பது பொருளாதார வீழ்ச்சியால் வந்தது மட்டுமல்ல. இது தேசிய இனப் பிரச்சினையால் வந்த பிரச்சினை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த காலங்களில் பல மாநாடுகள், கூட்டங்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டன. ஒவ்வொரு ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன. இந்த நாட்டுக்குள் மாத்திரமல்ல, நாட்டுக்கு வெளியே கூட நடந்தன. திம்பு, ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணம்.

யுத்தம் முடிந்தவுடன் புலம்பெயர் தமிழர்கள் பலர் இங்கு நிதிகளைக் கொண்டு வந்து முக்கியமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பினர். ஆனால், அதற்கு பெரும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இன்றுகூட பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய பலர் தயாராக இருக்கின்றபோதும்கூட தடைகள் ஏற்படுத்தப்பட்டு அந்த முதலீடு செய்ய வந்தவர்கள் திரும்பிச் சென்ற நிலைமைகளைக் காண முடிகிறது.

முதலாவதாக தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்க முடியும். நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தான் இந்த நாட்டின் பிரஜை என்பதை உணரக்கூடிய வகையிலிருந்தால் இன்று கூட வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை வழங்க பலர் தயாராகவுள்ளனர். அதற்கு முதலீடுகளை வழங்க ஏற்படுத்தப்படும் தடைகள், முதலீடுகள் பாதுகாக்கப்படுமா என்ற அச்சம் என்ற இரண்டையும் அரசாங்கம் இல்லாமல் செய்ய வேண்டும். ஆனால், ஆட்சிக்கு வரும் எவரும் இதனைக் கண்டுகொள்வதில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற எந்த அக்கறையும் ஆட்சியாளர்களிடம் இருந்ததில்லை.

இப்போதுகூட தேசிய மக்கள் சக்தி அரசு தமிழர்களை ஆறுதல்படுத்தும் குறுகிய கால வேலைகளையே செய்கிறது. யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டமைக்கு நிவாரணமும் மலையக மக்களுக்கு வீடமைப்பும் வழங்குவதால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடாது. அதற்கப்பால் சென்று நிரந்தர அமைதி ஏற்பட அதற்கான அடித்தளத்தை அரசாங்கம் இடவேண்டும்.

அமெரிக்கா தமது மக்கள் பொருளாதாரப் பின்னடைவுகளைச் சந்தித்தபோது மக்களின் வாழ்வாதாரத்தைத் தக்கவைக்க ஊக்குவிப்புப் பொதிகளை வழங்கியது. வர்த்தக சமூகத்தினருக்கு சலுகைகளை வழங்கி பின்னடைவில் குறுகிய காலத்தில் மீட்சி பெற உதவியது. இலங்கை இப்போது செய்வதைப்போல பல்முனை வரிகளை அதிகரித்து மக்களின் வாழ்க்கையோடு விளையாடவில்லை.

ஒரு பொருளாதாரத்தில் எப்போது வரிகளை அதிகரிக்க வேண்டும், எப்போது நிவாரணங்களை வழங்கவேண்டும் என்பதற்கெல்லாம் கோட்பாட்டு விளக்கங்களும் நடைமுறை உதாரணங்களும் உள்ளன. இப்போது இந்த வரவு – செலவுத்திட்டத்தில் ஆட்சியாளர் எடுத்துள்ள நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி தொடர்ந்து நீடித்திருக்கும் அபாயத்தையே உருவாக்கியிருக்கிறது.

நாட்டில் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவுற்ற மக்கள் வாழ்வதாக அரசாங்கமே அத்தாட்சிப்படுத்தும் மலையக மக்களின் துயர் துடைக்கவோ அல்லது முப்பதாண்டு கால யுத்தத்தால் பாழ்பட்டுப்போன வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்தோ அல்லது நகர்ப்புறங்களில் மிக வறிய நிலையிலுள்ள மக்கள் பற்றியோ எந்தவித கரிசனையும் காட்டப்படவில்லை. மாறாக, ஜனரஞ்சகமான இலக்குகளைக் கூறி கவனத்தை திசை திருப்பம் முயற்சிக்கே வரவு – செலவுத்திட்டத்தில் பெரும்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.அது துயரம்.

## இன்றைய நாளில்..

- 1815 – கண்டி போர்கள்: கண்டியின் கடைசி மன்னர் விக்கிரம ராஜசிங்கன் பிரித்தானியரால் தும்பற என்ற இடத்தில் கைது செய்யப்பட்டார்.
- 1876 – யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் ஆங்கில இதழ் வெளியிடப்பட்டது.
- 1878 – கிரமபோனுக்கான காப்புரிமத்தை தோமஸ் ஆல்வா எடிசன் பெற்றார்.
- 1985 – வில்லியம் சுரோடர் செயற்கை இதயம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டு மருத்துவமனையிலிருந்து வெளியேறிய முதலாவது நபரானார்.
- 1986 – சோவியத் ஒன்றியம் மீர் விண்வெளி நிலையத்தை விண்ணுக்கு ஏவியது.
- 1986 – உடும்பன்குளம் படுகொலைகள், 1986: அம்பாறையின் உடும்பன்குளத்தில் 80 தமிழ் விவசாயிகள் இலங்கை இராணுவத்தினரால் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டனர்.
- 2002 – நாசாவின் மார்ஸ் ஒடிசி விண்ணுலவி செவ்வாய்க் கோளின் மேற்பரப்பை வெப்ப உமிழ்வு முறை மூலம் வரைய ஆரம்பித்தது.

# இல்லறமும் துறவறமும்!

இல்லறம் மற்றும் துறவறத்தின் மேன்மைகளை அறிந்துகொள்வதற்காக ஆவலோடு காத்திருக்கும் வாசகப் பெருமக்களே! வணக்கம்.

எது நேர்மையான முறையில் திறமாகக் கையாளப்படுகிறதோ அதுவே அறம் என்று அழைக்கப்படும். மனதளவில் தூய்மையாக இருப்பது தொடங்கிப் பல்வேறு வாழ்வியல் ஒழுகலாறுகளில் நெறிபிறழாமல் வாழ்வது வரை அனைத்துமே அறம் சார்ந்தவைதாம். எழுத்தில் ஒரு நேர்மை இருந்தால் அது எழுத்து அறம்; பேச்சில் ஒரு செம்மை இருந்தால் அது பேச்சு அறம்; செயலில் ஓர் உண்மைத்துவம் இருந்தால் அது செயல் அறம். இப்படி நேர்த்தியின் உச்சம் தொட்ட எல்லாச் செயல்களுமே அறம் சார்ந்தவையாகப் போற்றப்படும். நமது தமிழ் மரபில் ஆணும் பெண்ணும் இணைந்து குடும்பமாக வாழும் இல்வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையைத் துறந்து தனியராய் வாழும் துறவு வாழ்க்கையையும் அறம் சார்ந்த நிலையில் வைத்து எண்ணுகிறோம். இல்லறம், துறவறம் ஆகிய எதிரெதிர் வாழ்முறை இரண்டுக்கும் பொதுமுறையாக அறம் வலியுறுத்தப்படுகிறது.



உலகில் எல்லாவகை இன்ப துன்பங்களுக்கும் ஆட்பட்டு, கணவன், மனைவி, மக்கள், சொத்து, சுகம், செல்வம், மகிழ்ச்சி என ஆண்டு அனுபவித்து, வீட்டோடு வாழ்ந்து, சமூகத்தோடு இணைந்து, வாழ்வாங்கு வாழ்வது இல்லறமாகும். வாய்த்திருக்கும் உலகியல் இன்பங்கள் அத்தனையையும் துறந்தும் உலக வாழ்க்கையை வெறுத்தும் காடுகள் வனங்களுக்கு ஏகி, ஏகாந்தமாய்த் தனித்திருந்து வாழ்க்கையின் உண்மை அர்த்தம் தேடித் துறவு வாழ்க்கை வாழ்வது துறவறமாகும்.

இல்லற வாழ்க்கை எனப்படும் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கிற வாழ்க்கை, பெரும்பாலும் எல்லா உயிரினங்களுக்கும் இயல்பாய் உடலியல்ரீதியாய் அமைந்து காணப்படுவதாகும். இரை உண்பதிலும் இனவிருத்தி செய்வதிலும் அவை இணைந்தே இயங்குகின்றனவென்றாலும் ஆறாவது அறிவுத்துணையோடு குடும்பமாய், குடியாய், சமூகமாய், வாழையடி வாழையாய், தலைமுறை தலைமுறையாய் இயைந்து வாழும் வாழ்க்கைமுறை மனித இனத்துக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது. மனித இனம் மட்டுமே அன்பு மற்றும் அறத்தின் வழிநின்று வாழ்க்கை நடத்துவதே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக எண்ணிச் செயற்பட்டு வருகிறது. அதேபோலத் துறவு வாழ்க்கை என்பது மனித இனத்துக்கயுரிய பிரத்தியேக வாழ்க்கையென்றாலும், அது மனித இனம் தவிர்ந்த வேறு எந்த உயிரினத்துக்கும் வாய்ப்பதில்லை. துறவில் தனித்து வாழ்வது அவற்றுக்குச் சாத்தியமுமில்லை.

ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழும் இல்லற வாழ்க்கையில் குடும்ப வாழ்க்கை நடத்தும்போதே, சில துறவற நெறிகளைக் கையாண்டு வாழ்வதால் இல்லறத்தார்க்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட்டுவிடுவதில்லை. வயோதிபப் பருவம் எட்டியபிறகோ அல்லது எட்டுகிற தறுவாயிலோ சில தம்பதியர் துறவியர்போல ஆகிக்கொண்டு குடும்பத்தில் சேர்ந்தேவாழும் நிலைகளையும் காணலாம். அனால், துறவு வாழ்க்கை என்பது தூய தவ வாழ்க்கை மற்றும் தொண்டு வாழ்க்கை என்று ஆனபிறகு அங்கு பந்தபாசம் பார்க்கிற, உடலியல் இச்சைக்கு ஆட்படுகிற இல்லறத் தன்மைகளுக்குத் துளியளவும் இடம் கிடையாது. இல்லறத்தில் அழுந்தத் தோய்ந்தவர்கள் ஒருநாள் திடீரெனத் துறவியாகித் துறவறம் மேற்கொள்ளலாம். ஆனால், துறவறம் மேற்கொண்டு வாழ்பவர்கள் இல்லறத்தில் ஈடுபடப் போகிறோமென்று திடீரென்று கிளம்பினால் சமூகம் அவர்களைப் போற்றிப் பாராட்டாது. அவர்களுக்கு அவச்சொல்லே மிஞ்சும். சுருங்கச் சொன்னால், இல்லறத்தில் துறவறம் சாத்தியம். துறவறத்தில் இல்லறம் கூடவே கூடாது.

ஒரு வைர வியாபாரி இரவுபகல் பாராது உழைத்துப் பெருமளவில் சொத்துச் சேர்த்தார். திருமணமும் செய்துகொண்டார். பல்லாண்டு காலமாகியும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. ஒரு நாள் இரவில் கணவனும் மனைவியும் அமர்ந்து தங்களது வாழ்க்கையைப் பற்றி ஆலோசனை செய்தனர். இவ்வளவுநாள் படாத பாடுபட்டுச் சேர்த்த சொத்துகளை அனுபவிக்கக் குழந்தை வாரிசு இல்லை. இவ்வளவு செல்வம் இருந்தும் என்ன பயன்? கணவன் மனைவியைப் பார்த்துச் சொன்னார், " எனக்கு இல்லற வாழ்க்கை அலுத்துவிட்டது. காவியைக் கட்டிக்கொண்டு சாமியாராகப் போய்விடலாமென்று முடிவெடுத்து விட்டேன்" - என்றார். "அப்படியானால் இவ்வளவு நாளும் அயராது பாடுபட்டு நீங்கள் சேர்த்த செல்வங்களையெல்லாம் என்ன பண்ணுவீர்கள்?" - மனைவி கேட்டார்.

வைர வியாபாரி சொன்னார், " இதோ பீரோவில் இருக்கிற நகை, பணம், சொத்துப்பத்திரங்கள் அத்தனையையும் எடுத்து உனக்கு முன்னே வைக்கிறேன். உனக்கு என்னென்ன வேண்டுமோ அவ்வளவையும் எடுத்துக்கொள். மீதமிருந்தால் தர்மத்துக்கு எழுதி வைத்து விடுகிறேன். அப்படியே நான் சந்நியாசம் வாங்கிக்கொண்டு கிளம்பி விடுகிறேன். நீ வசதியாக வாழ்" - என்று. "நீங்கள் துறவியாகக் கிளம்பியபின் எனக்கு மட்டும் எதற்கு சொகுசு வாழ்க்கை? நானும் உங்களுடனேயே துறவியாக வந்து விடுகிறேன். சொத்துகள் அனைத்தையும் தர்மத்துக்கே எழுதி விடுங்கள். இதோ இந்தத் தாலி உட்பட அனைத்தையும் துறந்து விடுகிறேன்" - என்று கூறித், தாலியைக் கழற்றப்போன மனைவியைத் தடுத்து நிறுத்தி, " அது நமக்குக் கல்யாணமானதன் அடையாளமாய் அப்படியே கழுத்தில் இருக்கட்டும். இனி நாம் எங்கு சென்றாலும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாய்ச் சேர்ந்தே செல்வோம் துறவு மனப்பான்மை மாறாமல்" - என்றார் வைர வியாபாரி.

எல்லாவற்றையும் துறந்து துறவு வாழ்க்கையில் கணவனும் மனைவியும் அடியெடுத்து வைத்தனர். ஊர் ஊராகக், கோயில் கோயிலாக நடந்தனர். கிடைத்த உணவை உண்டனர். வாய்த்த இடத்தில் உறங்கினர். இன்பமும் துன்பமும் அவர்களுக்கு ஒன்றுபோலவே தோன்றத் தொடங்கின. ஊர்ப்புற வாழ்க்கையை விட்டு ஒதுங்கி இனிக் காடுகளுக்குள் சென்று வாழலாம் என்று முடிவெடுத்து மலைப் பகுதியை நோக்கி நடந்தனர். அப்போதும்கூட கணவன், மனைவியிடம், "இனிமேல் தான் காட்டில் துறவுவாழ்க்கை கடினமானதாக இருக்கும். இப்போதும்கூட ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நீ ஊருக்குள் திரும்பிப் போய்விடு. போய் உன் வாழ்க்கையை நீ மகிழ்ச்சியாக வாழ்ந்துகொள்" - என்று ஆலோசனை கூறினார். அதற்கு மனைவி, "நான் துறவுவாழ்க்கை வாழ்வதில் மிகவும் உறுதியாக இருக்கிறேன். காட்டுக்குள் செல்லுங்கள். நான் பின்தொடர்ந்து வருகிறேன்" - என்றார்.

காட்டுப்பகுதிக்குள் நுழைந்த கணவன், தனது காலடியில் ஒரு விலைமதிக்க முடியாத மணி கிடப்பதைப் பார்த்துவிட்டார். கீழே குனிந்து மணியை எடுத்தால் அதை மனைவி பார்த்துவிட்டால், உலகியல் ஆசை அவருக்கு மீண்டும் வந்துவிடுமே என்று அஞ்சி, அந்த மணியின்மீது ஒரு காலை வைத்து மிதித்து நின்றுகொண்டு மனைவியைக் கடந்து போகச் சொன்னார். " நீங்கள் ஏன் அப்படி நிற்கிறீர்கள்?" - என்று மனைவி கேட்டுவிட்டார். "அது ஒன்றுமில்லை. விலைமதிக்க முடியாத மணி ஒன்று கீழே கிடக்கிறது. அது உன் கண்ணில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக மறைத்து மிதித்துக்கொண்டு நிற்கிறேன்" - என்றார் கணவர். "துறவு மேற்கொண்டு இவ்வளவு காலத்துக்குப் பின்னுமா உங்களுக்கு மணிக்கும் மண்ணாங்கட்டிக்கும் வேறுபாடு தெரிகிறது? எனக்கு எல்லாமே மண்ணாங்கட்டிகளாகத்தான் தெரிகிறது" - என்று கூறிக்கொண்டே கடந்து சென்றார் மனைவி. ஆம்! பொருட்களைத் துறப்பது மட்டுமல்ல, பொருட்களின் பெயர்களையும் துறப்பதே துறவு.

துன்பங்களே மனிதர்களைத் துறவிகள் ஆக்குகின்றன. மனித வாழ்க்கையில் நேரும் துன்பங்களையும் துயரங்களையும் கண்ட சித்தார்த்தன் புத்தனானதும் இப்படித்தான். ஆயினும், எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டு இன்பநிலை எய்துவதற்கு எல்லா மனிதர்க்கும் எளிய வழி துறவியாகப் போவதுதான் என்கிற முடிவுக்கும் வந்துவிடக்கூடாது. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் துறவுநிலையும் ஆச்சிரமங்களும் பெருநிறுவனத்தன்மையில் இயங்கத் தொடங்கியிருக்கும் சூழலில், முற்றும் துறந்து துறவுவாழ்க்கை வாழ்வதைப் பழங்கால நிலைகளோடு ஒப்பிட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது. அன்றைய துறவுநிலையில் மனித வாடையற்ற வனாந்தரங்களில் தவவாழ்க்கை வாழ்ந்து மறைந்துபோன தவமுனிவர்களும் உள்ளனர். ஆன்மீகத் திருத்தலங்களில் மக்களோடு மக்களாய், வினாக்களோடு தவம்புரிந்து வாழ்வியல் விடைகளைத் தெரிந்துகொண்டு, மக்களிடம் பகிர்ந்து கொண்ட ரமண மகரிஷிகளும் உள்ளனர். ஆனால், இல்லற வாழ்வில் ஈடுபாட்டோடு இணைந்திருக்கும் இன்றைய மனிதனுக்குத் துறவு வாழ்வின் தத்துவங்களும் நலம் கூட்டுவனவாகவே மாறியிருக்கின்றன.

அறிவியல் வேறு! ஆன்மீகம் வேறு! வாழ்வியல் வேறு! தத்துவம் வேறு! என்று தனித்திருந்த காலத்தையெல்லாம் கடந்து, இன்று எவரும் எதைப்பற்றியும் பேசக்கூடிய இணைய உலகில் இணைந்திருக்கிறோம். இமயமலையின் தவக்காட்சிகள், இப்போது அதே நேரத்தில், நேரலையில் தனுஷ்கோடியில் உள்ளவர் கண்களுக்கு தத்ரூபமாக விரிகின்றன. உணர்வு நிலையில் மட்டுமே இடங்கள் வெவ்வேறு என்கிற புரிதல் புலப்படுகிறது.

பொருட்களோடு வாழ்ந்தாலும் அந்தப் பொருட்களின்மீது பற்றுகளின்றி வாழ்வதே இல்லறத்தில் துறவு ஆகும். நோயற்ற வாழ்வு வாழ விரும்புவோர் உணவு முதற்கொண்டு எவ்வெவற்றில் துறவு மனப்பான்மை கைக்கொள்ள வேண்டும் எனபதைப் புரிந்துகொள்ள வேண்டும். உணவை மருந்தாக்கிக் கொண்டால், மருந்தைத் துறந்து மகிழ்ச்சியாய் வாழலாம். ஒத்துக்கொள்கிற உணவை மறுத்து மறுத்துச் சாப்பிட்டால் இல்லற வாழ்விலும் தவசியைப்போல தூய உடம்போடு வாழலாம்.

திருவள்ளுவர் துறவு என்கிற அதிகாரத்தைத் துறவிகளுக்காக மட்டுமே படைக்கவில்லை. பெரும்பான்மையும் இல்லறத்தார்க்காகவே பல நெறிகளை வகுத்துக்காட்டுகிறார். பொருட்களினால்தான் நமக்குத் துன்பங்கள் உண்டாகின்றன. அவை இருந்தாலும் துன்பம் காக்க வேண்டுமே என்றும் இல்லாவிட்டாலும் துன்பம் சேர்க்க வேண்டுமே என்றும் பொருட்களோடு வாழ்ந்தாலும் அவற்றின் மீது பற்று வைக்காமல் அவற்றைப் பயன்படுத்தி மட்டும் வாழக் கற்றுக்கொண்டால் எப்போதும் துன்பமில்லை.

நம்மிடம் இல்லாத பொருட்களை வெறுப்பதென்பது சீச்சீ இந்தப்பழம் புளிக்கும் என்கிற கதையைப் போன்றதுதான். இருக்கும்போதே அவற்றோடு துறவு மனப்பான்மையோடு இருப்பது, அதுவே உண்மைத் துறவு. இதைத்தான் வள்ளுவர் ''வேண்டின் உண்டாகத் துறக்க'' - என்கிறார். எல்லாவற்றுக்கும் ஆசைப்படுவதல்ல இல்லறம். தேவையானவற்றுக்காக ஆசைப்படுவது, அவற்றை அடைவதற்கு நியாயமான வழிகளில் கடமையாற்றுவது, பெற்ற பொருளையும் செல்வத்தையும் தமக்கென ஆசைப்பட்டு வைத்துக் கொள்ளாமல் தேவைப்படும் மனிதர்க்கு ஒரு துறவியைப்போலப் பகிர்ந்து கொடுப்பதுமாகும்.

பற்றில்லாத வாழ்க்கை அனைவரையும் சமமாகப் பார்க்கும் பரோபகாரப் பார்வையாகும். இன்றைய ஒவ்வொரு இல்லறத்தார்க்கும் தேவைப்படும் துறவறப்பார்வையும் அதுவேயாகும்.

**சுந்தர ஆவுடையப்பன்**
**நன்றி – மாலைமலர்**

## ஆட்சியாளர்களின் கவனத்துக்கு....

எமது நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் துப்பாக்கி வேட்டுகளும் மனிதப் படுகொலைகளும் விஸ்வரூபம் எடுத்திருப்பதுடன் மக்கள் மத்தியில் ஒருவிதமான அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

கடந்த 2024 ஒக்டோபர் மாதம் முதல் 2025 ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் இனந்தெரியாத சில நாசகார சக்திகளால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துமுள்ளனர். அத்துடன், கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யும் படலம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களுக்கிடையில் ஏற்படும் கொலைகளும் மனைவியைக் கணவன் கொலை செய்வதும் கணவனை மனைவி கொலை செய்வதும் பெற்ற பிள்ளையை வீதியில் வீசிவிட்டுச் செல்வதும் சர்வ சாதாரணமாக நடைபெறுகின்றன.

அத்துடன், சிறுவர் துஷ்பிரயோகம், பணமோசடிகளில் ஈடுபடும் கில்லாடிகள் தொழில் நிறுவனங்களில் அத்துமீறி நுழைந்து ஆயுதத்தைக் காட்டி பணத்தைக் கொள்ளையடிப்பதும் வீடுகளில் தனிமையிலிருக்கும் பெண்ணைக் கொலை செய்துவிட்டு பொருட்களைக் கொள்ளையடிப்பதும் பேஸ்புக் வழியாகப் பணத்தை மோசடி செய்வதும் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்படும் மதுபான சாலைகள், பெற்றோர்களைப் பிள்ளைகள் துன்புறுத்துவதும் பணம் கொடுக்க மறுத்தால் அவர்களை அடித்துக் கொலை செய்வதும் பெற்ற பிள்ளையை தந்தை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதும் நாளாந்தம் தவறாமல் சகல பகுதிகளிலும் இடம்பெற்றவண்ணமுள்ளன.

மேலும், பலதரப்பட்ட கொள்ளைச்சம்பவங்களும் நாள் தவறாமல் சகல பகுதிகளிலும் இடம்பெறும் போதைப்பொருள் விற்பனை, அதன் பாவனைகள் போன்ற குற்றப்பரிமாணங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மேற்படி இவ்வாறான மனித குலம் வெறுத்து ஒதுக்கக்கூடிய இறைவனின் சாபத்துக்கும் கோபத்துக்கும் உள்ளாகி பேசுபொருளாக பாவங்களையும் குற்றச் செயல்களையும் புரிவதற்கு ஐஸ், குடு, மதுபானம், கஞ்சா போன்றவை காரணிகளாகக் காணப்படுகின்றன.

அத்துடன், போதைப்பொருட்களின் முகவர்களாகக் காணப்படும் பாதாளக் கோஷ்டிகளின் துப்பாக்கிக் கலாசாரமும் அவர்களது அட்டகாசங்களும் கையோங்கிக் காணப்படுகின்றன. குறிப்பாக, எமது நாட்டில் மட்டுமன்றி, உலகளாவிய ரீதியிலும் இடம்பெறும் அனைத்துக் குற்றச்செயல்களுக்கும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் காரணமாகக் காணப்படுவதும் போதைப்பொருட்களே. ஆகவே, எமது நாட்டில் காணப்படும் இலஞ்சம், ஊழல் மோசடிகள் போன்றவற்றை இல்லாமல் செய்வதற்கு முன்னர் நாட்டில் தற்போது தலைவிரித்தாடிக்கொண்டிருக்கும் துப்பாக்கி வேட்டுகள், அதனோடு தொடர்புடைய மனிதப்படுகொலைகள் உட்பட சகல நாசகார செயல்களிலும் ஈடுபடும் அனைவரையும் இனங்கண்டு கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி அது யாராக இருந்தாலும் தராதரம் பாராது தண்டனை வழங்குவதோடு இவ்வாறான குற்றச் செயல்களைத் துடைத்தெறிந்து நாட்டில் அச்சம், பீதியற்ற சூழலை ஏற்படுத்தி மக்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ வழிசெய்ய வேண்டியது ஆட்சியாளர்களின் பாரிய பொறுப்பாகுமென்பதை வலியுறுத்தி வேண்டிக்கொள்கின்றோம்.

**யூ.எல்.ஏ. மஜீட்,**
**சாய்ந்தமருது.**

## மக்கள் கடிதம்

**வாசகர்களே!**

**உங்கள் பகுதியில் நிலவும் குறைபாடுகள், தேவைகளை சுட்டிக்காட்ட நாங்கள் இடம் தருகிறோம். தட்டச்சு செய்தோ, எழுத்து மூலமாகவோ அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பலாம். அவற்றை பிரசுரிப்போம்.**

ஆசிரியர்,
மக்கள் கடிதம், தமிழன் பத்திரிகை நிறுவனம்,
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
அல்லது ***thamilaneditor@gmail .com*** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

## நக்கல் நமசிவாயம்

***பட்ஜெட்டில 'குடி' மக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை பார்த்தீங்களோ..***



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 07ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** சமூகத்திலும் தொழிலிடத்திலும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

**ரிஷபம்:** உங்கள் பகைவர்கள் விநயமாக நடந்துகொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

**மிதுனம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடி சாதனை படைப்பீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி.

**கடகம்:** தொலை நோக்கு சிந்தையோடு இன்றுவேலைகளைஆரம்பிப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**சிம்மம்:** பணவருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விடமாட்டீர்கள். விடா முயற்சி வெற்றியைத் தரும்.

**கன்னி:** குடும்பத்துக்கான செலவுகளைச் செய்யவேண்டிய கட்டாயம். ஆனாலும், சாமாளித்துக் கொள் வீர்கள்.

**துலாம்:** விருந்துபசாரங்களில்அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். பரிசுப் பொருட்கள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** அதிக கோபத்தாலும் ஆணவத்தாலும் புத்தி இழந்துவிடாமல்பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

**தனுசு:** பொருள், தனவரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம்.

**மகரம்:** தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**மீனம்:** உடல் நோய்களால் சற்றுச் சிரமப்படுவீர்கள். தன, பொருள் இழப்புகளை இன்று சந்திக்கவேண்டிவரும்.

**திதி:** சஷ்டி மு.ப.7.32 வரை பின் சப்தமி

**நட்சத்திரம்:** சுவாதி மு.ப.10. 39 வரை பின் விசாகம்

**பிறை:** தேய்பிறை

**யோகம்:** மரண யோகம் மு.ப.10.39 வரை பின் சித்த யோகம்

**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்:** காலை6.26– 7.56 மணி வரை காலை 9.26 – 10.26 மணி வரை பகல் 1.56 – 3.26 மணி வரை மாலை 4.26 – 5.26 மணி வரை

**ராகு காலம்:** 12.26 – 1.56 மணி வரை

**எமகண்டம் :** 7.56 – 9.26 மணி வரை

**குளிகை :** 10.26 – 12.26 மணி வரை

**சந்திராஷ்டமம்:** மீனராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 10.39 மணி வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று முற்பகல் 10.39 மணிக்கு மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# காலச் சூழலுக்கேற்ப அரசியல் களம் மாற்றம் பெறவேண்டியது அவசியம்

## தமிழரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் வலியுறுத்து!

**(யாழ். நிருபர்)**

''காலச் சூழலுக்கேற்ப அரசியல் களமும் அதற்கான முடிவுகளும் மாற்றம்பெறவேண்டியது அவசியமாகும். அதற்கேற்ப நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் அரசியல் பரப்பிலுள்ள கட்சிகளுடன் அவரவர் கட்சிகளின் கொள்கைகள் மாறுபடாது இணக்கப்பாட்டை ஏற்படுத்தி வடக்கு, கிழக்கிலுள்ள உள்ளூர் அதிகாரசபைகளை வெற்றிகொள்வதற்கான சாதக நிலைகளை உருவாக்க வேண்டும்'' - என தமிழரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது கடந்த காலங்களைப்போலல்லாது அரசியல் களம் மாற்றமடைந்துள்ளது. இது தமிழ்த் தரப்பினரின் அரசியல் களத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் தமிழ் அரசியல் புலம் சார்ந்த கட்சிகள் கைப்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது.

இந்நிலையில், தமிழ் அரசியல் பரப்பிலுள்ள கட்சிகள், கொள்கைகள், பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் தங்களின் நிலைப்பாடுகளில் இருந்துகொண்டு ஒன்றிணைவது அவசியமாகும்.

இதில் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்த அனைத்து போராளிக் கட்சிகளும் அடங்குவதாக இருக்கவேண்டுமென்பதுடன், அது தொடர்பில் கருத்தாடல்கள் கட்சிகளின் தலைவர்களுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேநேரம், தற்போது அனைவரும் ஒரு புதிய தளத்துக்கு வருவதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது நிறைவுற்ற பின்னரே தேர்தலில் தற்போதைய களச் சூழலுக்கேற்ப எவ்வாறு ஒரே நிலைப்பாட்டுடன் போட்டியிடுவதென்பதைத் தீர்மானிக்க முடியும்.

அது மட்டுமல்லாது, கூட்டாகப் போட்டியிடுவதா இரண்டு அல்லது மூன்று தரப்புகளாக வாக்குகள் சிதறாதவண்ணம் போட்டியிடுவதா என்பது பற்றியும் அடைவை எட்ட முடியும்.

அத்துடன், தமிழ்த் தரப்பின் போட்டியாளர்கள் எந்தவொரு கட்சியும் மற்றைய தரப்பின் மீது காழ்ப்புணர்ச்சியுடனோ அல்லது சேறு பூசல்களையோ முன்னெடுக்காது ஒரே குறிக்கோளுடன் வெற்றியிலக்கை அடையும் பொறிமுறையை உள்ளடக்கிய வகையில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கான கள நிலையை உருவாக்க வேண்டும்.

அந்தவகையில், அவரவர் தத்தமது சுயத்தோடு நின்று பேசி, ஒருமித்த கருத்தோடு வெற்றிவாய்ப்புக் களச்சூழல் யாருக்குப் பொருத்தமாக இருக்குமோ அதற்கேற்ப நகர்வுகளை முன்னெடுப்பதும் அவசியமாகும்.

இதேநேரம், தமிழரசுக் கட்சியில் தற்போது பொதுச் செயலாளராக சுமந்திரன் தெரிவாகியுள்ள நிலையில், கட்சியின் முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படுமா என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு அவ்வாறான எதுவும் இனி இடம்பெற வாய்ப்பிருக்காதென்றும் சிறீதரனைக்கூட கட்சியிலிருந்து வெளியேற்ற இடமளிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

# கனியமணல் அகழ்வுக்கான கள ஆய்வை நிறுத்துக; மீறி இடம்பெற்றால் மன்னாரில் களேபரம் ஏற்படும்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் எச்சரிக்கை

**(விஜயரத்தினம் சரவணன்)**



மன்னார் தீவில் மக்களின் விருப்பமின்றி கனியமணல் அகழ்வதற்காக நாளை (இன்று 19) மேற்கொள்ளப்படவுள்ள கள ஆய்வை உடனடியாக நிறுத்தவேண்டுமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களின் விருப்பமின்றி குறித்த கள ஆய்வு இடம்பெற்றால் பாரியளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதாகச் சுட்டிக்காட்டியதுடன், ஆபத்தான நிலைமைகள் தோன்றலாமெனவும், சட்ட - ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுமெனவும் இதன்போது எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (18) இடம்பெற்ற வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''மன்னார் தீவுப் பகுதியில் கனியமணல் அகழ்வு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். மன்னார் தீவுப் பகுதி என்பது மிகவும் குறுகிய தாழ்வான நிலப்பகுதியாகும். கடல்நீர் மட்டத்திலிருந்து தாழ்வான நிலப்பகுதி என்பதால் மழை காலத்தில் நீர் வழிந்தோட முடியாமல் பொதுமக்கள் தொடர்ந்தும் இடம்பெயரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தைத் தாங்குதிறன் கொண்டதாகத் தீவுப்பகுதியின் தரைத்தோற்ற அமைவிடம் இல்லை. அதனால்தான் மன்னார் தீவில் மூன்று மாடிகளுக்குமேல் கட்டிடங்களை அமைப்பதற்கு நகரஅபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்குவதில்லை. ஆகவே, இப்பகுதியில் கனியமணல் அகழ்வதென்பது மிகவும் பாரதூரமான விளைவுகளை பொது மக்களுக்கு ஏற்படுத்தும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைமையின்கீழ் 23 அரச திணைக்களங்கள் மன்னார் தீவுப் பகுதிக்குச் சென்று கள ஆய்வு மேற்கொண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை வழங்குவதற்குரிய ஏற்பாட்டுக்கு கடந்த இரண்டு தடவைகள் சென்றபோதும் மக்களின் பாரிய எதிர்ப்புக் காரணமாக மேற்கொள்ளமுடியாத நிலைமை காணப்பட்டது.

இந்நிலையில், பெப்ரவரி 17 (நேற்று முன்தினம்) மன்னார் நீதிமன்றத்தில் போராட்டத்துக்கு எதிராகத் தடையுத்தரவு பெற்றுக்கொண்டு, பெப்ரவரி 19 நாளையதினம் அப்பகுதியில் கள ஆய்வை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். அந்த மக்களின் விருப்பமில்லாமல் தனியார் காணிக்குள் அத்துமீறி உட்புகுந்து இந்த ஆய்வை மேற்கொண்டு, தனியார் நிறுவனங்களுக்கு கனியமணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதென்பது அந்த மக்களுக்குச் செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகும்.

எந்தத் திட்டமாக இருந்தாலும் மக்களின் விருப்பமின்றி செயற்படுத்த முடியாது. பாரியளவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலை நிலவுவதால் ஆபத்தான நிலைமைகள் தோன்றலாம். சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது.

ஆகவே, உடனடியாக நாளைய (இன்று) களஆய்வை மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் ஏனைய திணைக்களங்களும் நிறுத்தவேண்டுமென இந்த உயரிய சபையினூடாக கோரிக்கை விடுக்கின்றேன்'' - என்றார்.

# சைக்கிள் மீது ரிப்பர் மோதி விபத்து:

## ஒருவர் பலி – சாரதி கைது



**(பு.கஜிந்தன்)**

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து நேற்று (18) பிற்பகல் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சைக்கிள் மீது, ரிப்பர் மோதியதாலேயே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்த நிலையில், சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

விபத்தை ஏற்படுத்திய ரிப்பர் சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

# உறக்கத்திலிருந்த ஒன்றரை மாத குழந்தை இறந்த நிலையில் மீட்பு; காரணம் கண்டறியப்படவில்லை

## உடற்கூறுகள் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைப்பு

**(வவுணதீவு செய்தியாளர்)**

மட்டக்களப்பு, கடுக்காமுனை கிராமத்தில் வீட்டில் தாயுடன் உறக்கத்திலிருந்த குழந்தை இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள கடுக்காமுனை பகுதியில் பிறந்து ஒன்றரை மாதமான குழந்தை இரவு தாயாரிடம் பால் அருந்திவிட்டு தாயுடன் தமது வீட்டில் உறங்கியுள்ளது. மறுநாள் நேற்று முன்தினம் (17) அதிகாலை குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக எழுப்பியபோது குழந்தை மூச்சு சுவாசம் இல்லாமல் இருந்துள்ளது.

உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது குழந்தை முன்னரே இறந்துவிட்டதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸாரின் வேண்டுகோளுக்கமைய மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்கு சென்று மரண விசாரனைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்தமாறு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப் படாததால் உடற்கூறுகள் மேலதிக பரிசோதனைக்காக பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

குழந்தையின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# நீச்சல் தடாகத்தில் வழுக்கி விழுந்த பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா)**

மெனிக்ஹின்ன பகுதியில் விடுதியொன்றின் நீச்சல் தடாகத்தில் வழுக்கி விழுந்து தலையில் பலத்த காயமடைந்து இந்திய பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எஸ். சந்தோஷ் வயது 26 என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவன் மேலும் 08 பல்கலைக்கழக மாணவர்களுடன் கடந்த 16 நாட்களுக்கு முன்னர் குறித்த விடுதிக்குச் சென்றிருந்தமை பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

நீச்சல் தடாகத்தில் நேற்று (18) அதிகாலை வரை மகிழ்ந்த இவர்கள், வழுக்கி விழுந்த நிலையில், கண்டி, தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்துள்ளார்.

மாணவர்கள் மது அருந்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மெனிக்ஹின்ன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறையிலுள்ள கணவருக்கு ஐஸ் போதைப்பொருள் எடுத்துச்சென்ற மனைவி கைது



**(கனகராசா சரவணன்)**

ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டு மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கணவருக்கு உணவுடன் ஐஸ் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்துக்கொண்டுசென்ற மனைவி நேற்று (18) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதையடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு வழங்கப்பட்ட நீதவானின் உத்தரவுக்கமைய மட்டு. சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு ஒரு மாதகாலமாக இருந்து வருகின்றார்.

இந்நிலையில், நேற்று (18) சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கணவரைப் பார்ப்பதற்காக உணவுடன் ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருளை மனைவி எடுத்துச் சென்ற நிலையில், அவற்றை சிறைச்சாலை அதிகாரிகள் சோதனையிட்டபோது சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் அவரை சிறைச்சாலை அதிகாரிகள் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஓட்டமாவடி 3ஆம் பிரிவு உசேனியா வீதியைச் சேர்ந்த 27 வயதுப் பெண்ணை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கண்டி நவயாலதென்ன பகுதியில் சிதைவடைந்த நிலையில் சடலம் மீட்பு

**(கண்டி நிருபர்)**

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவயாலதென்ன பிரதேசத்தில் மகாவலி கங்கைக்கருகில் நேற்று முன்தினம் (17) மாலை சிதைவடைந்த நிலையில் சடலமொன்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இவ்வாறு கட்டுகஸ்தோட்டை பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ள சடலம் சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஆணொருவர் என பொலிஸார் அடையாளம் கண்டபோதும் மேற்படி சடலம் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக நடவடிக்கை நிமித்தம் குறித்த சடலமானது தற்பொழுது கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வறட்சியான காலநிலை காரணமாக குடிநீரை சிக்கனமாகப் பயன்படுத்துக!

## தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவிப்பு

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக குடிநீரை சிக்கனமாகப் பாவிக்குமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் அதிக வறட்சியான காலநிலை காரணமாக குடிநீர் விநியோகத்தை மட்டுப்படுத்துவதனால் வாகனங்களைக் கழுவுதல், வீட்டுத் தோட்டச் செய்கை போன்ற செயற்பாடுகளுக்காக நீரைப் பயன்படுத்துவதைக் குறைத்து அத்தியாவசியமான அன்றாட செயற்பாடுகளுக்கு மாத்திரம் நீரைப் பயன்படுத்துமாறும் அறிவித்துள்ளது.

உயரமான பிரதேசப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு குறைந்த அழுத்தத்திலேயே நீர் விநியோகம் செய்யப்படும்.

வரட்சியான வானிலையால் ஏற்படும் பொதுவான அசௌகரியங்களைக் குறைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகவும் சுத்தமான குடிநீரை முடிந்தவரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகிறது.

# அதிக வெப்பநிலை காரணமாக உடலில் நீரிழப்பு ஏற்படலாம்

## மருத்துவர்கள் சங்கம் எச்சரிக்கை



தற்போது காணப்படும் வறட்சி யான காலநிலையுடன் ஏற்பட்டுள்ள அதிக வெப்ப நிலை காரணமாக உடம்பில் நீரிழப்பு நிலை ஏற்படக்கூடுமென இலங்கை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது விசேடமாக உடம்பில் அதிகளவில் வியர்வை அதிகரித்து வெளியேறுவதால் உடம்பில் நீரின் அளவு குறைவடையக் கூடியதாக விருப்பதுடன் இந்த நிலை அதிகரிப்பதனால் உடலுக்கு அதனைத் தாங்கிக்கொள்ள முடியாதென்றும் இச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதனால் மயக்கம் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகளும் நீரிழப்பு நிலையினால் சில இயலாமை நிலையும் ஏற்படக்கூடும். அதனால் இந்த நிலையைத் தடுப்பதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டுமென சங்கம் குறிப்பிட்டுள்ளது.

விசேடமாக அதிக நீர்ப் பானங்கள் அருந்துதல், கடும் வெயிலில் நடமாடக் கூடிய நிலைமையைத் தவிர்த்தல், நிழல் காணப்படும் இடங்களில் முடிந்தவரை இருத்தல், இளநீர் போன்ற நீர் ஆகாரங்களை அருந்துதல் மற்றும் இனிப்புச் சுவை அதிகமுள்ள பானங்களை அருந்துவதைத் தவிர்த்தல் போன்ற வழிகளைப் பின்பற்றுமாறு மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிறுவர்கள் மற்றும் வயது வந்தவர்களுக்கு இந்த நிலை அதிக செல்வாக்குடையதாகக் காணப்படுவதுடன் அவர்களை அவதானத்துடன் செயற்பட அனுமதிக்க வேண்டுமென்றும் தற்போதைய உலர் காலநிலையால் நீர் வெளியேறுவதைத் தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறும் மருத்துவர்கள் சங்கம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

# பளையில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

கிளி.பளை தம்பலகாமம் பகுதியில் நேற்று முன்தினம் (17) நள்ளிரவு ஐயாத்துரை சிவனேசன் என்பவரின் வீட்டுக்கு இனந்தெரியாத நபர்களால் பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் திட்டமிட்டுப் பழிவாங்கும் நோக்கில் சொத்தழிவை ஏற்படுத்துவதற்காக குறித்த பெற்றோல் குண்டு வீசப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நாசகார செயற்பாட்டால் வீட்டின் பல பகுதிகள் தீக்கிரையாகியுள்ளன. சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பன்னாகமப் பதியில் உருவத்திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் மாத்தளை வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் மாசிமக மகோற்சவத்தின் முதலாம் நாள் நிகழ்வான கொடியேற்றத் திருவிழாவில் நேற்று (18) பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளுடன் கொடிச்சீலை ஊர்வலம் நகர்வலம் வருவதையும் கொடியேற்றம் மற்றும் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள் – டி.வசந்த், ஆ.சுதாகரன்)

### மானியத் திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்துவது நல்லதல்ல;

# அரசாங்க மானியங்களைச் சார்ந்திருக்கும் ஒரு குழுவை உருவாக்குவதை விட சமூகத்தை மேம்படுத்துவது முக்கியமானது

## பொருளாதாரம் - புள்ளியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள

(எம்.ஏ.அமீனுல்லா)

''அஸ்வெசும போன்ற மானியத் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவது நல்லதல்ல. அரசாங்க மானியங்களைச் சார்ந்திருக்கும் ஒரு குழுவை உருவாக்குவதைவிட சமூகத்தை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானது'' - என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.



இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் முன்வைத்த வரவு-செலவுத்திட்ட அறிக்கைகளை வைத்துப் பார்க்கும்போது பொருளாதாரம் மற்றும் சமூகம் பற்றிய பரந்த பார்வையின்றி ஒவ்வொரு சமூகத்தினரையும் குறிவைத்து ஒருவிதமான மானியத் திட்டம் முன்வைக்கப்பட்டதாகத் தோன்றினாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அவ்வாறான விடயங்கள் காட்டப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

பதவிக்கு வந்ததன் பின்னர் தேசிய மக்கள் சக்தி முன்வைத்த கன்னி வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பேராசிரியர் வசந்த அத்துகோரள மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய அவர்,

கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் சமூகம் மற்றும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளையும் முழுமையாக உள்ளடக்கும் முயற்சியை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் காணலாம்.

இத்துறைகளில் நீண்டகாலமாக நிலவும் கட்டமைப்புச் சிக்கல்களைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு ஏதாவதொரு வகையில் தீர்வுகளை வழங்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதை வரவு-செலவுத் திட்டத்தில் காணமுடிகிறது. மேலும், சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையினர், தனியார் மற்றும் பொதுத்துறையில் பணிபுரிபவர்கள், ஓய்வு பெற்றவர்கள், நீர்ப்பாசன முறையின் மேம்பாடு, விவசாயத்தின் மேம்பாடு, கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறையான மேம்பாடு என ஒவ்வொரு பிரிவினரையும் உள்ளடக்கும் வகையில் இது ஆராயப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொருளாதார மற்றும் ஆக்கப்பூர்வமான விடயங்களை உள்ளடக்கி தயார் செய்திருந்தால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இன்னும் சுவையாக இருந்திருக்கும். அரசை தனியாரிடமிருந்து பிரித்து வைத்திருக்கும் முயற்சியை ஓரளவுக்கு இதில் காணலாம். அதேசமயம், அரசு மற்றும் தனியார் துறையின் கூட்டுப்பணிகள் குறித்தும் இங்கு அறியக்கூடியதாகவுள்ளது.

அரசு முன்வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைகளை தனியாரையும் இணைத்து செயற்படுத்தினால் நல்லது. தனியார் துறையில் தொழில்முனைவோர் வகுப்பின் மூலம் பொருளாதாரம் முன்னேற வேண்டும். அப்படியானால், நாட்டில் தனியார் நிறுவன வகுப்பை உருவாக்கத் தேவையான பின்னணி உருவாக்கப்பட வேண்டும். மானியங்களைச் சார்ந்திருக்கும் சமுதாயத்தை நாங்கள் விரும்பவில்லை. பல்வேறு மானியத் திட்டங்கள் இருந்தாலும், நீண்டகால அடிப்படையில் செயற்படுத்தக் கூடாது. சமுதாயத்தில் மானியம் தேவைப்படும் மக்கள் உள்ளனர். அவர்களை சமூகப் பொறுப்பாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். அஸ்வெசும போன்ற மானியத் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவது நல்லதல்ல. அரசாங்க மானியங்களைச் சார்ந்திருக்கும் ஒரு குழுவை உருவாக்குவதைவிட சமூகத்தை மேம்படுத்துவது மிகவும் முக்கியமானது. மூன்றாவது தவணையை வழங்கிய பிறகு, சர்வதேச நாணய நிதியம் இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் அவர்களின் இலக்குகளுக்கேற்ப உள்ளதா என்பதை சரிபார்க்க நான்காவது தவணையைத் தாமதப்படுத்தியது.

அரசாங்கத்தின் வருமானம் மற்றும் செலவு இலக்குகள் சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகோல்களுக்கமைவாக இருப்பதை இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் காணமுடிகிறது.

இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியம் நான்காவது தவணையை விரைவில் எமக்கு வழங்குமென்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது - என்றார்.

# உலக புராதன கேந்திரத் தலமாக கண்டி நகரை மாற்றத் திட்டம்



கண்டி நகரை மையமாகக்கொண்ட 168 அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

2035ஆம் வருடமாகும்போது பூர்த்திசெய்வதற்குத் திட்டமிட்ட பாரிய கண்டி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் குமுது லால் தெரிவித்தார்.

இப்பாரிய கண்டி நகர அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல் கண்டி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

'கந்த உடரட்ட தேஜாத்வித அகநகரய' (மலைப்பகுதியில் மலைநாட்டின் புகழ்பெற்ற தலைநகரம்) எனும் இந்த கண்டி நகரில் சமய, கலாசார, வரலாற்று மற்றும் கலாசார உரிமைகள் பரவலாக உள்வாங்கப்படும் விதமாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

கண்டி மாநகர சபை உட்பட உள்ளூராட்சி நிறுவனங்கள் 15ஐ மையப்படுத்தியதாக 600 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேச திட்டம் 168இல் 13 திட்டங்கள் கண்டி நகரத்திலும் செயற்படுத்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு பொது வாகனத் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதுடன், நுவரவெல மற்றும் சிங்க ரெஜிமேந்து வளாகங்கள் அமைந்துள்ள பிரதேசத்துக்கு அண்மையில் பொதுப் போக்குவரத்து வாகனத் தரிப்பிடங்கள் இரண்டை அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டது.

பல்நோக்குப் போக்குவரத்து வாகனத் தரிப்பிடம் அமைத்தல், ஹிருஸ்ஸகல சந்திக்கு அண்மையிலிருந்து வில்லியம் கோபல்லாவ மாவத்தையூடாக வைத்தியசாலை சந்தி வரையான வீதி அபிவிருத்தி, மஹிய்யாவை சுரங்கப்பாதை நிர்மாணம், குடாரத்வத்த வீதி மற்றும் வில்லியம் கோபல்லாவ மாவத்தை அபிவிருத்தி, தென்னேகும்புறயிலிருந்து தர்மராஜ வித்தியாலயத்துக்கு அண்மை வரையான பிரதான வீதி ஆகியவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இத்திட்டத்தின் கீழ் இடம்பெறவுள்ளன.

# இலங்கையின் வருடாந்த திறந்தவெளி கலைக் கண்காட்சியான 'கலா பொல-2025'



இலங்கையின் வருடாந்த திறந்தவெளி கலைக் கண்காட்சியான கலா பொல, 32ஆவது ஆண்டாக கடந்த 16ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07 (கிரீன் பாத்) இலுள்ள ஆனந்த குமாரசாமி மாவத்தையில் ஆரம்பமானது. இந்நிகழ்வு ஏராளமான கலை ஆர்வலர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் மாணவர்களை ஈர்த்தது.

1993ஆம் ஆண்டு ஜோர்ஜ் கீத் அறக்கட்டளையால் கருத்தாக்கம் செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வானது, 1994 முதல் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தொடர்ச்சியான அனுசரணை மற்றும் செயற்படுத்தல் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கொள்வனவாளர்களுடனும் கலை சமூகத்துடனும் ஓவியர்கள், சிற்பிகள் உள்ளிட்ட காட்சிக் கலை கலைஞர்கள் இணைவதற்கான நாட்டின் மிகப்பெரிய தளத்தை வழங்குகிறது. இது ஒரு சந்தையாகவும் உரையாடல்கள், அறிவு பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்புக்கான இடத்தை வழங்கும் இடமாகவும் திகழ்கிறது. நாட்டின் படைப்பாற்றல், பொருளாதாரம் மற்றும் சமூக ஒற்றுமையையும் அது மேம்படுத்துகிறது.

இவ்வருட நிகழ்வில் இலங்கையின் பல்வேறு மாகாணங்களைச் சேர்ந்த 390க்கும் மேற்பட்ட உள்ளூர்க் கலைஞர்களின் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வின் உத்தியோகபூர்வ விழாவில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அண்ட்ரூ பெட்ரிக் (Andrew Patrick), பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கலை அரங்குகளைப் பார்வையிட்ட அவர், கலைஞர்களுடனும் உரையாடினார். இந்த நிகழ்வானது, சிறுவர்களுக்கான கலைப் படைப்புப் பகுதி, இளம் கலைஞர்களுக்கான பட்டறை, நேரடி ஓவிய அமர்வு, கலை பற்றிய பேச்சு மற்றும் கலாசார பொழுதுபோக்கு ஆகியவற்றால் மேலும் கலகலப்பாக அமைந்திருந்தது.

# பேருவளை கடற்கரைப் பகுதியில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்



(பேருவளை பீ.எம்.முக்தார்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின்கீழ் பேருவளை கடற்கரைப் பகுதியை சுத்தப்படுத்தும் பணி சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த வேலைத்திட்டத்தின் முதல்கட்ட நடவடிக்கையாக பேருவளை நகர எல்லைக்குட்பட்ட பல பகுதிகளில் குப்பைகூளங்களை சுத்திகரிக்கும் நடவடிக்கை ஆரம்பமானதுடன், அரசு அதிகாரிகள், பொலிஸார், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பெரும்பாலானோர் கலந்துகொண்டனர்.

'எழில்மிகு கடற்கரைப் பிரதேசம் கவர்ச்சிகரமான சுற்றுப் பயணம்' என்ற தொனிப்பொருளில் இந்தச் சுத்திகரிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை மீன்பிடித் துறைமுகப் பகுதி, பேருவளை நகரம், கடற்கரை பீச் திடல் பகுதி, பொல்கொடுவ, மாகல்கந்த, பரணகட கெச்சிமலை பகுதி உட்பட பல பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்திக் குழுத் தலைவருமான சந்திம ஹெட்டியாராச்சி, பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் அரூஸ் அஸாத், பேருவளை பிரதேச செயலாளர் ரன்சன் பெரேரா, களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காவிந்த பியசேகர, பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார, நகர சபை மற்றும் பிரதேச சபை செயலாளர்கள் உட்படப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் அனைவரும் வழங்கும் முழுமையான ஒத்துழைப்புக்கு இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.

'சுத்தமான கடற்கரையினூடாகக் கவர்ச்சிகரமான சுற்றுப்பயணம்' எனும் தொனிப்பொருளின்கீழ் களுத்துறை மாவட்டத்தில் கடற்கரையோரங்கள் அழகான முறையில் துப்புரவுசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209

# நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)



இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரிகின்ற அம்பாறை மாவட்ட தமிழ் மொழிமூல அனைத்துப் போதனாசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ரி.வினோதராசாவின் அடக்குமுறை மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நிந்தவூர் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் முன்றிலில் திங்கட்கிழமை (17) மேற்கொண்டனர்.

இதன்போது பிரதிப் பணிப்பாளர் ரி.வினோதராசாவின் நிர்வாக முறைமையில் அதிருப்தியடைந்த சகல உத்தியோகத்தர்களும் அவரை உடனடியாக இடமாற்றக் கோரி இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஒருங்கிணைந்த சுதந்திர தொழிற்சங்கச் செயலாளர் நிஹால் விதானகேவின் வழிகாட்டுதலில் இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இப்பிரதிப் பணிப்பாளர் அவரின் கடந்த சேவைக்காலங்களில் பல தண்டனை இடம்மாற்றங்களைப் பெற்றிருப்பதோடு, பலதரப்பட்ட நிர்வாக முறைமை மற்றும் நிதி தொடர்பான குற்றங்களுக்காக இடமாற்றங்களைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



(ஒலுவில் செய்தியாளர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் விசேட குழந்தைகள் பராமரிப்புப் பிரிவுக்கு சுமார் 05 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (17) சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ.பிரபாசங்கர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மருத்துவ உபகரணங்களை கையளித்தார்.

இதன்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் வைத்திய நிபுணர் டாக்டர் பீ.எம்.அர்ஷாத் அஹமட், பிராந்திய உயிரியல் மருத்துவப் பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வாங்காமம் கிளினிக் நிலைய சேவைகளை மேம்படுத்த நடவடிக்கை

(மாளிகைக்காடு செய்தியாளர்)



இறக்காமம், வாங்காமம் பிரதேச மக்களின் நலன் கருதி அப்பிரதேசத்தில் அமைந்துள்ள கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்த பொதுமக்களுக்குச் சேவைகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீனிடம் வாங்காமம் பிரதேச மக்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் வாரத்தில் திங்கள் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்கள் முன்னெடுக்கப்பட்ட கிளினிக் சேவை மூன்று தினங்களாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆளணி மற்றும் வளப் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை மாத்திரம் வழங்கிக்கொண்டிருக்கும் வாங்காமம் கிளினிக் நிலையத்தில் எதிர்வரும் காலங்களில் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு (PMCU) ஒன்றை திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த கிளினிக் நிலையத்தின் சேவைகளை மேம்படுத்துவதற்கும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவொன்றை வாங்காமத்தில் திறப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வாங்காமம் பிரதேச மக்கள் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளனர்.




கிண்ணியா டி.பி.ஜாயா மகா வித்தியாலயத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் சத்தியப்பிரமாண நிகழ்வு திங்கட்கிழமை (17) காலை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எஸ்.ரி.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு, சுத்தமான சூழலை பாதுகாத்துக்கொள்ள உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.
(சீனக்குடா செய்தியாளர்)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி

(மண்டூர் செய்தியாளர்)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதிவாளர் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞனொருவர் திங்கட்கிழமை(17) உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காளிகோயில் வீதி, குருமண்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதான கமலராஜன் ததுசன் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

கடந்த 13ஆம் திகதி தனது வீட்டிலிருந்து வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் பின்னர் பதிவாளர் வீதியில் குறித்த இளைஞன் விபத்துக்குள்ளான நிலையில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவுக்கமைவாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார்.

சம்பவம் பற்றிய விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக சி.சி.பி.பண்டார செவ்வாய்க்கிழமை (18) தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். ஏற்கனவே கடமையிலிருந்த பொறுப்பதிகாரி வருடாந்த இடமாற்றத்தில் கடந்த வாரம் சென்றமையால் அவரது இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார்.
(செங்கலடி செய்தியாளர்)

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42 பேர் பொலிஸாரால் கைது



(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

காத்தான்குடி பொலிஸாரின் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளின்போது குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 42 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரத்நாயக்கவின் பணிப்புரையின்பேரில் காத்தான்குடி குற்றத்தடுப்புப் பொலிஸார் மற்றும் போதை ஒழிப்புப் பிரிவினர் குறித்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது ஐஸ் போதைப்பொருளுடன் 15 பேரும் கேரள கஞ்சாவை வைத்திருந்த ஒருவரும் சட்டவிரோத சிகரெட்டுகளுடன் இருவரும் கசிப்பு போதைபொருள் விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 24 பேருமாக 42 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள், கேரள கஞ்சா, கசிப்பு, சிகரெட்டுகள், கசிப்பு தயாரிப்பு உபகரணங்கள், எரிவாயு சிலிண்டர் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# புலமைச் சித்தி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(வாழைச்சேனை செய்தியாளர்)

கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட கோறளைப்பற்று வடக்கு வாகரை கோட்டத்துக்குட்பட்ட வம்மிவட்டவான் வித்தியாலயத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் சிவலிங்கம் இந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்குடா வலயக் கல்வி அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெகதீஸ்வரன், கதிரவெளி கனிஷ்ட வித்தியாலய அதிபர் பி.இராமச்சந்திரன், ஊடகவியலாளர்களான ந.குகதர்சன், எஸ்.ஏ.ஸ்ரீதர், சமூக செயற்பாட்டாளர் அ.வாசுதன், கற்பித்த ஆசிரியை திருமதி நிலாந்தினி விஜிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வாகரை வம்மிவட்டவான் வித்தியாலயத்தில் ஜெகதீஸ்வரன் அபிஷ்னன் (143), நவக்குமார் டிலுக்ஷிக்கா (143), ரகு குமார் ஷக்சனா (142) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கே மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கனடாவில் வசிக்கும் தொழிலதிபரும் சமூகசேவையாளரும் ஊடகவியலாளருமான திருமதி ரேகா சிவாவின் நிதி அனுசரணையில் குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிளில் சென்ற வயோதிபப்பெண் விபத்தில் பலி

(மண்டூர் செய்தியாளர்)

வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபொல பிரதேசத்தில் வயோதிபப்பெண் ஒருவர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (17) இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொத்தியாபொல, கன்னன்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய பத்து பிள்ளைகளின் தாயாரான பாலிப்போடி எள்ளுப்பிள்ளை என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

உயிரிழந்தவர் கடந்தவாரம் தனது வீட்டிலிருந்து வீதி வழியாகச் சென்றுகொண்டிருக்கும்போது அதே பாதையூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த யுவதியொருவர் தனது மோட்டார் சைக்கிளில் தலைக்கவசமின்றி அவரை ஏற்றிச் செல்லும்போது குறித்த வயோதிபப்பெண் தவறுதலாக வீதியில் விழுந்து விபத்துக்குள்ளாகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கமைவாக பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்தார்.

சம்பவம் பற்றிய விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





காத்தான்குடி ஸாலிஹ் அல்குர்ஆன் மத்ரஸாவில் அல்குர்ஆன் கற்ற 65 மாணவர்களைக் கௌரவிக்கும் 33ஆவது விழா காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் அதன் அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அஸார் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (16) இடம்பெற்றது. இந்நிகழ்வில் 65 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், உயர்நிலை அடைந்த இம் மத்ரஸாவின் பழைய மாணவர்களுக்கும் கௌரவ விருதுகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் மௌலவி எம்.ஐ.ஆதம்லெப்பை பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், உலமாக்கள், ஊர்ப் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (காத்தான்குடி செய்தியாளர்)



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தீகவாபி பிரதேசத்தில் 20 காணி உரிமையாளர்களுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டது.

இதன்போது தீகவாபி பரிவர சைத்திய பொறுப்பாளர் போதிபல சந்தானந்த ஹிமி மற்றும் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.
(திராய்க்கேணி செய்தியாளர்)





கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஏற்பாட்டில் வை.எம்.எம்.ஏ. பேரவை மற்றும் கல்முனை ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பங்களிப்புடன் இலவச மூக்குக்கண்ணாடிகள் மற்றும் கண் வில்லைகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(15) இடம்பெற்றது. பவுண்டேசன் ஸ்தாபகர் ரஹ்மத் மன்சூரின் தலைமையில் சுமார் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு இலங்கையைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் சீனியா தாசிமின் அனுசரணையில் கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (கல்முனை செய்தியாளர்)

# தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது – உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களையும் வழங்குக

## பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் வலியுறுத்து

*(கிண்ணியா நிருபர்)*

''இட ஒதுக்கீடுகளை வழங்கி தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது, உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்'' - என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் பாராளுமன்றத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

''உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் 2018ஆம் ஆண்டுக்கு முன்பு இலங்கை முழுவதுமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 4,493 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்களுக்கு மாதத்துக்கு ரூ.75 மில்லியன் என்ற அடிப்படையில் ஆண்டுக்கு ரூ.900 மில்லியன் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,493 இலிருந்து 8,356 ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன், 385 தொங்கும் உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தமாக 8,741 உறுப்பினர்கள் 341 உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்கு மாதக் கொடுப்பனவாக ரூ.142 மில்லியன் என்ற அடிப்படையில் ஆண்டுக்கு ரூ. 1,680 மில்லியன் வழங்கப்பட்டது. இது முன்னைய தடவையை விட மாதத்துக்கு ரூ. 66 மில்லியன் அதிகமானது. ஆண்டுக்கு ரூ.789 மில்லியன் அதிகமானது.

இந்தச் செலவினங்களைக் குறைக்கும் பொருட்டாக ஆய்வுசெய்து பரிந்துரை வழங்குமாறு மஹிந்த தேசப்பிரிய, ரவி ஜெயலத், ஹமீட், தவலிங்கம், திருமதிஅதிகாரி ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று 2022 ஒக்டோபர் மாதத்தில் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவானது செய்து உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் தொகையை 56% குறைத்து அதாவது, 8,356 இலிருந்து 4,714 ஆகக் குறைக்க முடியுமெனப் பரிந்துரை செய்தது. இதன்மூலம் ஏறத்தாழ ஆண்டுக்கு 750 மில்லியன் ரூபா அரச செலவினத்தைக் குறைக்கமுடியுமெனவும் பரிந்துரை செய்தது.



எனவே, அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தவேண்டுமென்ற இந்த அரசாங்கத்தின் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டாகவும் உள்ளூராட்சி மன்றங்களின் நிலையற்ற தன்மையைத் தவிர்க்கும் வகையிலும் நாட்டின் நன்மை கருதியும் இந்த ஆண்டு நடத்தவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை மேற்படி குழுவின் பரிந்துரைப்படி 4,714 உறுப்பினர்களைத் தெரியும் வண்ணம் நடத்துமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இட ஒதுக்கீடுகளை வழங்கி தேர்தலை நடத்தினால் மட்டும் போதாது, உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும். எமது அண்டைய நாடான இந்தியாவிலே கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் உயர்நிலை கல்வி நிறுவனங்களைக் கூட நடத்தி வருகின்றனர்.

டொரன்டோ மேயர் காவல் துறை ஆணையாளரை நியமிக்கும் அதிகாரம் கொண்டவராகக் காணப்படுகிறார். இந்த அதிகாரங்களை நமது உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்கினால்தான் பெண்களை, இளையோரை வலுப்படுத்துவோம் என்னும் சொல்லுக்கு ஒரு பொருள் இருக்கமுடியும்.

மேலும் இந்த உள்ளூர் அதிகார சபைகளுக்குப் போதுமான வசதிகள் இல்லை. எடுத்துக்காட்டாக கோணமலை நகர சபைக்கு குப்பைகளை அகற்றுவதற்கு மிகக் குறைந்த வாகனங்கள் தான் காணப்படுகின்றன. இதனால் ஒழுங்காகக் குப்பைகளை அகற்றுவதற்கு இயலாமல் உள்ளது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு கூடுதலான வாகன வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

இறுதியாக உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இளையோர், பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்க வேண்டும். உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அவற்றுக்கு வசதி வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்'' - என்றார்.

# காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையிலான கப்பல் போக்குவரத்து சேவை மீள ஆரம்பம்!

*(பு.கஜிந்தன்)*

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்துக் கப்பல் சேவையானது எதிர்வரும் 22.02.2025 இல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22.02.2025 அன்று காலை 7.30 மணியளவில் நாகபட்டினத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப. 1.30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தைச் சென்றடையும்.

www.sailsubham.com என்ற இணையதளத்துக்குள் பிரவேசித்து பயணச்சீட்டுகளைப் பதிவுசெய்ய முடியும். இந்தக் கப்பல் சேவையானது செவ்வாய்க்கிழமை தவிர்த்து வாரத்துக்கு 6 நாட்கள் ஈடுபடுமென அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸில் கலந்துரையாடல்



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது குறித்த கலந்துரையாடலொன்று கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாத்தில் திங்கட்கிழமை (17) நடைபெற்றது.

இதன்போது கட்சியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.எஸ். நழீம், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோர் உட்பட கொழும்பு மாவட்ட மத்திய குழுவிலிருந்து நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் கமிட்டியினர் மற்றும் முக்கியஸ்தர்கள் பங்குபற்றி தமது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.



IF STAR Foundation ஏற்பாடு செய்த இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு புத்தளம் ஹாராச்சி கட்டுவ பிரதேசத்தில் IF STAR FOUNDATION நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.எச்.எம்.இம்ரான் தலைமையின் கீழ் இச்சங்கத்தின் தலைவர் லஹிரீன் சைபுதீன் கரங்களால் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# சீரடி சாயி மகிமை பற்றி சிறப்புச் சொற்பொழிவு



இந்தியாவின் புகழ்பெற்ற ஆன்மீக சொற்பொழிவாளரான திருமதி வாசுகி மனோகரன் நாளை 20ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30.மணிக்கு கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் சீரடி சாயி பாபாவின் மகிமை பற்றி உரையாற்றவுள்ளார்.

இந்தியாவின் புகழ்மிக்க வாரியார் விருது பெற்ற இவர், முத்தமிழ் செல்வி, இன்னிசை சொல்லரசி, சந்த தமிழ் வாணி முதலான சிறப்புப் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

கடந்த 30 ஆண்டுகளாக பாமர மக்கள் மத்தியிலும் எளிதில் புரியும்படியாக உபன்யாசம் செய்துவரும் இவர், சீரடி சாயி பாபாவின் தீவிர பக்தையுமாவார்.

# மூன்று வயது குழந்தையும் மாமாவும் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழப்பு

*(பு.கஜிந்தன்)*



யாழ்ப்பாணம் சங்கரத்தைப் பகுதியிலுள்ள திக்கிராய்க் குளத்துக்கருகிலுள்ள கிணற்றினுள் தவறுதலாக விழுந்த குழந்தையும் தாய் மாமனும் உயிரிழந்துள்ளனர்.

விஸ்வமடு ரெட்வனா, முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த தனுசன் டனுசன் என்ற 03 வயது ஆண் குழந்தையும் கல்லூரி வீதி, வட்டுத்தெற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெருமாள் மகிந்தன் (வயது 30) என்ற குழந்தையின் தாய்மாமனுமே உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த குழந்தையும் தாய்மாமனும் கிணற்றினுள் தவறி விழுந்துள்ளனர். குழந்தை மேலே மிதந்ததை அங்கிருந்தவர்கள் அவதானித்த நிலையில், குழந்தையை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்த நிலையில், குழந்தை ஏற்கனவே உயிரிழந்ததாகத் தெரிவித்தனர்.

குழந்தையின் மாமனை மீட்டு முதலுதவி அளித்தபோதும் அவரும் உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக இரண்டு சடலங்களும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆறு துப்பாக்கிகளுடன் இருவர் கைது

*(அநுராதபுரம் நிருபர் )*

அநுராதபுரம் கிரானேகம பகுதியின் இரு வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ஆறு துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவரை கிரானேகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (17) பிற்பகல் வேளையில் கிரானேகம பொலிஸ் பிரிவின் கோரளயாகம மற்றும் உல்பத்தயாய பகுதிகளில் நடத்திய சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளதுடன், வெளிநாட்டில் தயாரித்த போர 12 ரக துப்பாக்கி ஒன்றையும் உள்ளூரில் தயாரித்த ஐந்து துப்பாக்கிகளையும் கிரானேகம பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.



கைதுசெய்யப்பட்டவர்கள் 49, 51 வயதுடைய தேவஹுவ மற்றும் தம்புளுஹல்மில்லவெவ பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரானேகம பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இருவரும் கெக்கிராவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (18.02.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 182.9322 | 192.3453 |
| கனேடியன் டொலர் | 203.8251 | 212.5892 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.1531 | 41.7908 |
| யூரோ | 303.0552 | 315.5606 |
| ஜப்பான் யென் | 1.9082 | 1.9843 |
| சிங்கப்பூர் டொலர் | 215.1300 | 224.9884 |
| ஸ்ரேலிங் பவுன் | 365.5588 | 379.5110 |
| சுவிஸ் பிராங் | 320.0198 | 335.3092 |
| ஐ.அ. டொலர் | 291.2807 | 299.8141 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 783.6835 |
| குவைட் | குவைட் தினார் | 956.8988 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.1146 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0279 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7486 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4102 |

# சீன மீனவர்களைப் பயன்படுத்தி இந்தியாவை அச்சுறுத்த முடியாது

## யாழ். மாவட்ட மீனவர் சம்மேளனம் தெரிவிப்பு!




*(பு.கஜிந்தன்)*

''இந்திய அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் எமது மீனவர்கள் பாதிக்கப்பட்டுவரும் நிலையில், அதனைப் பயன்படுத்தி சீனா இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்துவதற்கு இடமளிக்க மாட்டோம்''- என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கடந்த வாரம் சீன தூதரக அதிகாரிகளை எமது கடற் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்தனர். அவர்களைச் சந்தித்ததன் நோக்கம் கடந்த கொரோனா காலங்கள் மற்றும் இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்பட்ட எமது மீனவர்களுக்கு பல்வேறுபட்ட உதவிகளை முன்னர் செய்திருந்தார்கள்.

அவர்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்ததோடு தொடர்ந்தும் இந்திய இழுவைமடியால் பாதிக்கப்பட்டு வரும் எமது மீனவர்களுக்கு உதவிசெய்யுமாறும் கோரிக்கை விடுத்தோம்.

இதே கோரிக்கையை இந்திய அரசிடமும் முன்வைத்திருக்கிறோம். யார் எமது மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினாலும் அதை நாம் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

இந்திய அத்துமீறிய இழுவைமடிப் படகுகளால் தொடர்ச்சியாக நாம் பாதிக்கப்பட்டு வரும் நிலையில், சீனா எமக்கு உதவி செய்கிறோம் என எமது கடல் பிராந்தியத்தால் இந்திய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் எம்மைப் பயன்படுத்த எதிர்பார்த்தால் அதைச் செய்ய முடியாது.

இந்தியா எமது அயல் நாடு. அது மாத்திரமல்ல, எமது தொப்புள் கொடி உறவு என்ற ரீதியில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக எமது கடலை பயன்படுத்த அனுமதிக்கப்போவதில்லை'' - என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு மீளாய்வு முடிவுகள் வெளியாகின

2023 (2024) க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் மீள் பரிசீலனை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.donets.lk அல்லது www.results.exams.gov.lk மூலம் பொருத்தமான சுட்டெண் அல்லது பரீட்சார்த்தியின் தேசிய அடையாள அட்டை (NIC) எண்ணை உள்ளிடுவதன் மூலம் முடிவுகளைப் பார்க்கலாமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் வீரசுந்தர தெரிவித்தார்.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

# செல்போன் பார்த்தபடி சாப்பிட்டால் இதயம் பாதிக்கும்!



## உணவுப் பிரியர்களே உஷார்

சிலருக்கு கடிகாரம் அடித்தது போல பசிக்கிறது. இது ஆரோக்கியத்தின் அடையாளம். சிலர் மணிக்கணக்கில் பசி இல்லாதது போல் உணர்கிறார்கள். இது நோயின் அடையாளம்.

மாறிவரும் வாழ்க்கை முறை உணவுப் பழக்கத்தையும் மாற்றிவிட்டது. ஒரே நேரத்தில் அதிகளவு சாப்பிடுவது. பசிக்கிறதோ இல்லையோ ஏதாவது சாப்பிடுவது. தீங்கு விளைவிக்கும்.

உண்மையில், நம் உடல் நமக்கு எப்போது பசிக்கிறது, எப்போது உணவு தேவைப்படுகிறது என்பதை நமக்குச் சொல்கிறது. அதை நாம் பின்பற்ற வேண்டும்.

ஆனால் இப்போது பலர் தங்களுக்குப் பிடித்ததைச் சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு அதிக எடை முதல் நீரிழிவு வரை பல நோய்கள் வருகின்றன.

உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும் தேவையான சக்தியை மீண்டும் பெறவும் ஒருவர் ஊட்டச்சத்து மதிப்புகள் நிறைந்த சீரான உணவை தவறாமல் உட்கொள்ள வேண்டும்.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம் குறிப்பாக இளைஞர்களிடையே கவலைக்குரிய ஒரு காரணமாகும். தேவைக்கு அதிகமாக சாப்பிடுவது தீங்கு விளைவிக்கும். பலருக்கு அவர்கள் சுதந்திரமாக இருக்கும்போது ஏதாவது சாப்பிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

உண்மையில் பசிக்காவிட்டாலும் கூட அவர்களின் உடல் விரும்பாவிட்டாலும் கூட சாப்பிடுகிறார்கள். இது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகிறது. பலர் டி.வி. அல்லது மொபைல் போன்களை பார்த்துக்கொண்டே சாப்பிடுகிறார்கள். இதன் பொருள் நீங்கள் உண்ணும் உணவின் மீது எந்த கட்டுப்பாடும் இல்லை. வயிறு நிரம்பியதாக உணராததால் மக்கள் அதிகமாக சாப்பிடுகிறார்கள்.

இதனால் உடலில் கலோரிகளின் அளவு அதிகரிக்கிறது.

பொதுவாக எமது வெறும் வயிற்றில் 75 மில்லி லீற்றர் தண்ணீர் இருக்கும். இது 950 மில்லிலீற்றர்கள் வரை பொருட்களை வைத்திருக்கக்கூடியது.

ஒரே நேரத்தில் அதிகமாக சாப்பிடுவது செரிமான அமைப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

சாப்பிட்ட பிறகும் நீங்கள் மகிழ்ச்சியாக உணர வேண்டும். சோர்வாக இருந்தால் ஆபத்து என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்ணும்போது இரத்த சர்க்கரை அளவுகள் அதிகரித்து பின்னர் குறையக்கூடும். இதனால் சோர்வு மற்றும் எரிச்சல் ஏற்படுகிறது.

உணவு முறைக்கும் தூக்கமின்மைக்கும் தொடர்பு இருப்பதாக ஒரு ஆய்வு காட்டுகிறது. மோசமாக தூங்கும் 60 சதவீத மக்கள் இரவில் சிற்றுண்டி சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாம் எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பது மட்டுமல்ல. எப்படி சாப்பிடுகிறோம் என்பதும் உடலைப் பாதிக்கிறது. சிலருக்கு வேகமாக சாப்பிடும் பழக்கம் இருக்கும்.

இது நேரத்தை மிச்சப்படுத்தும் என்று கருதப்படுகிறது. ஆனால் ஏற்படும் சேதம் மிக அதிகம். வேகமாக சாப்பிடுபவர்களுக்கு கெட்ட கொழுப்பு அதிகரிக்கும். இது இதய பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

அதிகமாக சாப்பிடுவது மனதையும் பாதிக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. பதற்றம் அதிகரிக்கிறது என்று மாறிவிடும்.

சரியாக மெல்லாமல் சாப்பிடுவது செரிமான பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

உங்கள் உணவை ரசித்து ருசித்து சாப்பிடுங்கள். நல்லது என்பதற்காக அதிகமாக சாப்பிடுவது மிக விரைவாக சாப்பிடுவது இரண்டுமே நல்லதல்ல.

மதுவுக்கு அடிமையானவர்கள் அதிக உணவை உட்கொள்வதாகவும் ஆய்வுகள் காட்டுகின்றன.

மேலும் சிலர் சாப்பிடும்போது குளிர் பானங்கள் குடிப்பார்கள். இது உண்ணும் உணவின் அளவையும் அதிகரிக்கிறது. இந்தப் பழக்கங்களை உடனடியாக நிறுத்த வேண்டும். உணவு பிரியர்கள் உஷாராக இருக்க வேண்டும் என டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

# உலகில் பலவீனமான கரன்சிகள்!




ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் வலிமை மற்றும் வர்த்தகத்தின் மூலம், உலகின் பிற பகுதிகளுடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளதை வைத்தே, ரூபா மதிப்பு கருத்தில் கொள்ளப்படுகிறது. இருப்பினும், அனைத்து நாடுகளும் அவற்றின் நாணயத்தாள் மதிப்புகளை ஒரே சீராக பராமரிக்க முடியவில்லை.

பலவீனமான பொருளாதார சூழல், அரசியல் பிரச்சினைகள் மற்றும் உலகளாவிய அழுத்தங்கள் போன்ற தாக்கங்களை எதிர்கொள்கின்றன, சில நாடுகள்.

சமீபத்தில், போர்ப்ஸ் இதழ், உலகின் பலவீனமான நாணயத்தாள்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. பட்டியலில் இடம்பிடித்துள்ள நாடுகளையும் அதன் பின்னணி காரணங்களையும் இங்கே பார்க்கலாம்...

மேற்கு ஆசிய நாடான ஈரானின் - ரியால், தற்போது உலகின் மிகவும் பலவீனமான கரன்சியாக முதலிடத்தில் உள்ளது. 1978 - 79இல், இஸ்லாமியப் புரட்சியில் துவங்கி, ஈரானில் அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, ஈரானிய ரியாலின் மதிப்பு, பல ஆண்டுகளாக கணிசமாகக் குறைந்து விட்டது.

தென் கிழக்காசிய நாடான, வியட்நாமின் - டாங், நீண்ட காலமாக பலவீனமான கரன்சியாக உள்ளது. குறிப்பாக, வியட்நாம் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதாரத்தில் இருந்து, சந்தை அடிப்படையிலான பொருளாதாரத்துக்கு மாறியதே இதற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள சியரா லியோனியன் - லியோன், உலகின் மூன்றாவது பலவீனமான கரன்சியாகும். சியரா லியோனியன் போர், அரசியல் பிரச்சினை மற்றும் வறுமை போன்ற பல மோசமான சூழல்களை எதிர்கொண்டது. இந்த சவால்கள் காரணமாக, பல ஆண்டுகளாக லியோன் கரன்சி, அதன் மதிப்பை கணிசமாக இழந்துள்ளது

தென் கிழக்காசிய நாடான லாவோஸின் - கிப், உலகின் நான்காவது பலவீனமான கரன்சியாகும். லாவோஸ், மிகவும் சிறிய அளவிலான பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. மேலும், வெளிநாட்டு உதவி மற்றும் முதலீட்டை, அதிகம் சார்ந்துள்ளது. இந்த காரணங்களால், கிப் கரன்சியின் மதிப்பு குறைந்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவின் - ருபியா, பலவீனமான கரன்சிகளின் பட்டியலில், ஐந்தாவது இடத்தில் உள்ளது. இயற்கை வளங்களை விற்பனை செய்வது இங்கு அதிகம். ஆனால், விலை வீழ்ச்சி, அதன் பொருளாதாரத்தைக் கடுமையாக பாதித்துள்ளது. சந்தை உயர்வு மற்றும் போதிய அந்நிய செலாவணி இல்லாமை ஆகியவை, ருபியா கரன்சியின் மதிப்பை குறைத்துள்ளது.

மத்திய ஆசிய நாடான உஸ்பெகிஸ்தானின் - சோம், ஆறாவது இடத்தில் உள்ளது. உஸ்பெகிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதாரத்தில் இருந்து சந்தை அடிப்படையிலான பொருளாதாரத்துக்கு மாறுகிறது. எனவே, அரசியல் பிரச்சினைகள் மற்றும் திறமையின்மை காரணமாக, இந்த கரன்சி பலவீனமாக உள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவின் - பிராங்க், ஏழாவது இடத்தில் உள்ளது. பல ஆண்டுகளாக அரசியல் பிரச்சினைகள், ஊழல் மற்றும் மெதுவான வளர்ச்சி காரணமாக, பிராங்க் கரன்சி பலவீனமாக உள்ளது. கினியாவில், கனிமங்கள் போன்ற மதிப்புமிக்க இயற்கை வளங்கள் நிறைய இருந்தாலும், அந்த நாட்டினால், மற்ற தொழில்களை மேம்படுத்த முடியவில்லை. இது, அதன் கரன்சியின் மதிப்பை குறைத்துள்ளது.

தென் அமெரிக்காவில் உள்ள பராகுவேவின் - குரானி, எட்டாவது இடத்தில் உள்ளது. விலைவாசி உயர்வு, வறுமை மற்றும் வேலையின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கிறது பராகுவே. இது, குரானி கரன்சியை பலவீனப்படுத்தியுள்ளது. இங்கு, விவசாயம் மேம்பட்டாலும் பொருளாதாரம் என்பது இன்னும் பெரியளவில் போராட்டத்தைச் சந்தித்து வருகிறது.

தென் கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவின் - ரியால் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. நகரங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்காகவும் மக்கள் பெரும்பாலும் ரியாலுக்குப் பதிலாக அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்துகின்றனர். மக்கள், ரியாலை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று அரசு விரும்பினாலும், அதன் மதிப்பு இன்னும் குறைவாகவே உள்ளது.

கிழக்கு ஆபிரிக்க நாடான உகண்டாவின் - ஷில்லிங், 10ஆவது இடத்தில் உள்ளது. ஷில்லிங், பல ஆண்டுகளாகவே பலவீனமாக உள்ளது. குறிப்பாக, 1971 - 79களில், இடி அமீனின் ஆட்சியின் போது ஏற்பட்ட முக்கிய பிரச்சினைகள் காரணமாக, ஊழலும் மோசமான தலைமையும் நாட்டைப் பின்னுக்குத் தள்ளின. இதன் விளைவாக, இன்று உலகின் பலவீனமான கரன்சிகளில் ஒன்றாக ஷில்லிங் உள்ளது.

**எம். முகுந்த்**

# வேகஸ் நரம்பு மண்டலத்தை வலுப்படுத்தும் ஊட்டச்சத்துகள்..!



மூளையையும் உடலையும் இணைக்கும் நெடுஞ்சாலையாக உள்ள நரம்பு பாதை வேகஸ் நரம்பு என்று அழைக்கப்படுகிறது. இந்த அமைப்பு செரிமானம், இதய துடிப்பு மற்றும் நோயெதிர்ப்பு அமைப்பு போன்ற குறிப்பிட்ட உடல் செயற்பாடுகளை கட்டுப்படுத்துகிறது. வேகஸ் நரம்பில் ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்படும் போது தூக்கமின்மை, நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் மற்றும் மனத் தெளிவு குறைதல் போன்ற உடல் அறிகுறிகள் தோன்றும். ஆகையால் இந்த நரம்பை வலுப்படுத்த தேவையான ஊட்டச்சத்து அவசியமாகும். வேகஸ் நரம்பை வலுப்படுத்தும் ஊட்டச்சத்துகள் குறித்து அறிந்து கொள்வோம்.

### கோலைன்

சத்து நரம்பு மண்டலத்துக்கு மிகவும் முக்கியமானதாகும். இவை



அறிவாற்றல் திறன் அதிகரிப்பு மற்றும் இதயத்தை பாதுகாக்கிறது. சிவப்பு இறைச்சி மற்றும் மீன்களில் இவை அதிகம் உள்ளன. இதிலுள்ள பாரோரெஃப்ளெக்ஸ் உணர்திறனை மீட்டெடுக்க உதவுகிறது.

### விட்டமின் பி12

வேகஸ் நரம்பின் ஆரோக்கிய மூலமாக விற்றமின் பி12



உள்ளது. பால், முட்டையில் இந்த ஊட்டச்சத்து அதிகளவு உள்ளது. இவற்றை தொடர்ந்து எடுத்துக் கொள்ளும்போது, ஊட்டச்சத்து பற்றாக்குறை ஈடுசெய்யப்படும்.

### மெக்னீசியம்

பச்சை இலைக் காய்கறிகளில் ஏராளமாகக் காணப்படும்



மெக்னீசியம் உள்ளது. இது தசைச் சுருக்கம், இரத்த அழுத்தம் மற்றும் இன்சுலின் வளர்சிதை மாற்றத்தைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

### சோடியம்

சமையலுக்கு பயன்படுத்தப்படும் உப்பில் உள்ள சோடியம்,



தசைச் சுருக்கம், நரம்பியல் செயற்பாடு மற்றும் ஊட்டச்சத்து உறிஞ்சுதல் போன்ற பல உடலியல் செயல்முறைகளுக்கு உதவுகிறது.

### ஒமேகா-3

சியா விதைகள், அக்ரூட் பருப்புகள் ஆகியவற்றில்



காணப்படும் ஒமேகா-3 ஹோர்மோன்கள் உற்பத்தி மற்றும் இதயத் துடிப்பைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.



# தரையிறங்கும்போது தலைகீழாக கவிழ்ந்த கனேடிய விமானம்

## 18 பேர் காயம்; இருவரின் நிலை கவலைக்கிடம்

கனடாவில் விமானமொன்று தரையிறங்கும் போது கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் குழந்தையொன்றும் உள்ளடங்குவதுடன் அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இவ்விமான விபத்துக்கு பனிப்பொழிவு காரணமா என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரிலிருந்து கனடாவின் டொரன்டோ நகருக்கு 76 பயணிகள் மற்றும் 04 ஊழியர்கள் உள்ளடங்களாக 80 பேருடன் பயணித்த டெல்டா நிறுவனத்துக்குச் சொந்தமான Flight 4819 என்ற விமானம் உள்ளூர் நேரப்படி 2.45 மணியளவில் டொரன்டோவில் தரையிறங்கிய போது, திடீரென விபத்துக்குள்ளாகி ஓடுபாதையில் தலைகீழாக கவிழ்ந்து தீப்பிடித்தது.

இந்நிலையில் விமானத்திலிருந்த 80 பேரில் 18 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஒரு குழந்தையும் உள்ளடங்குகின்றது. காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், ஏனையவர்கள் உரிய பரிசோதனைக்குப் பின்னர் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதில் இருவரது நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்துக்கு பனிப்பொழிவு காரணமா என்ற ரீதியில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

விமானம் தரையிறங்கும் போது மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் பனி வீசிக் கொண்டிருந்தது. இது தொடர்பான வீடியோ காட்சிகளும் சமூக வலைதளத்தில் வெளியாகியுள்ளன. விமான நிலையம் அமைந்துள்ள பகுதியில் வெப்பநிலை மைனஸ் 8.6 டிகிரி செல்சியஸ் இருப்பதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது மாதிரியான விபத்து மிகவும் அரிதானது என விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். விமானம் புறப்படும் போது இந்த வகையிலான விபத்து இரண்டு முறை நடந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

### மூச்சுக் குழாய் அழற்சி...

## தொடர்சிகிச்சையில் போப் பிரான்ஸிஸ்



கத்தோலிக தலைமை மதகுரு போப் பிரான்சிஸுக்கு (வயது 88) மூச்சுக் குழாய் அழற்சி (பிராங்கைடஸ்) பாதிப்புக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளநிலையில், அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதுடன் அவரது நோய் சிக்கலான நிலையில் இருப்பதாகவும் வத்திகான் அறிவித்துள்ளது.

சிறுவயதிலேயே ஒரு நுரையீரல் அகற்றப்பட்ட போப் பிரான்சிஸுக்கு நீண்ட காலமாகவே உடல்நலப் பிரச்சினைகள் இருந்துவருகின்றன.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக இருந்து வரும் போப் பிரான்சிஸ் கடந்த வாரம் உடல்நலம் பாதிக்கப்பட்டு ரோம் நகரிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு சுவாசக் குழாயில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், போப்புக்கு சுவாசத்தொற்று அதிகரித்து காணப்படுகிறது. இதனால், அவருக்கு தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது என வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது. இதனால், அவர் வைத்தியசாலையில் தொடர்ந்து தங்கி சிகிச்சை பெறுவார்.

இதுகுறித்து வத்திகான் செய்தி தொடர்பாளர் மேத்யூ புரூனி தெரிவிக்கையில்,

''வைரஸ்கள், பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகள் என பல வகையான தொற்று பாதிப்புகளால் போப் அவதிப்பட்டு வருகிறார். சமீப காலங்களாக அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மற்றும் நேற்றுமுன்தினம் (17) நடந்த பரிசோதனை முடிவில், அவருக்கு சுவாசக் குழாயில் கலவையான தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இதனால், கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சைக்காக ரோம் நகரின் ஜெமிலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு, கடந்த 2023ஆம் ஆண்டு நிமோனியா பாதிப்புக்காக போப் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். எனினும், போப், பத்திரிகை வாசிப்பது உட்பட சில அன்றாடப் பணிகளை செய்து வருகிறார். அவருடைய நிலைமை சீராகவுள்ளது என்று புரூனி தெரிவித்துள்ளார். எனினும், எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி சாம்பல் புதன் வரை அவர் எந்த நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### உக்ரைனில் விரைவில் போர் நிறுத்தம்:

## ட்ரம்ப் - ஸெலென்ஸ்கியுடன் பிரான்ஸ் ஜனாதிபதி பேச்சு



**உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா - ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தை சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நேற்று (18) நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மற்றும் புட்டினின் வெளியுறவு ஆலோசகர் யூரி உஷாகோவ் ஆகியோர் ரஷ்யா சார்பாக பங்கேற்கின்றனர். அமெரிக்கா சார்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ், ட்ரம்பின் தூதுவர் ஸ்டீவ் விட்காப் ஆகியோர் பங்கேற்கின்றனர்.**

**இது குறித்து ரஷ்ய ஜனாதிபதி கிரெம்ளின் மாளிகை செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், ''அமெரிக்கா - ரஷ்யா இடையிலான உறவுகளை மீட்டெடுப்பது, உக்ரைன் விவகாரத்தில் தீர்வு காண்பது ஆகியவை பேச்சுவார்த்தையில் முக்கிய இடம்பெறும்'' - என்றார்.**

உக்ரைனில் நீடிக்கும் போருக்கு வெகுவிரைவில் முற்றுப்புள்ளி வைக்க பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஐரோப்பிய அவசரநிலை மாநாடு நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன். இந்த பேச்சுவார்த்தைக்குப்பின், உக்ரைனில் நீடிக்கும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன் தெரிவித்துள்ளதாவது,

“உக்ரைனில் நீடித்த அமைதி நிலவ நாங்கள் விரும்புகிறோம். இதனை அடைய, ரஷ்யா தமது இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும்.

மேலும், உக்ரைன் மக்களுக்கு வலிமையான நம்பிக்கையளிக்கும் விதத்தில் பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கிடவும் வேண்டும். இல்லையெனில், போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், அது ‘மின்ஸ்க் ஒப்பந்தங்கள்’ போல முடிந்துவிடும். இந்த விவகாரத்தில் நாங்கள் அனைத்து ஐரோப்பிய நாடுகளுடனும் அமெரிக்கா மற்றும் உக்ரைனுடன் இணைந்து பணியாற்றுவோம். இதுவே சிறந்த வழி.

மேலும், “ஐரோப்பிய நாடுகள் தங்களின் எதிர்கால பாதுகாப்புக்காக அதிகம் முதலீடு செய்தாக வேண்டுமென்ற கருத்திலும் உடன்படுகிறோம். ஐரோப்பிய ஆணையத்தின் முன்மொழிவுகளை ஏற்று, அதன்படி உக்ரைனுக்கு ஆதரவாகவும் ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான முதலீட்டு நடவடிக்கைக்கான பணிகளும் விரைவாக நடைபெறும்” - என்றார்.



# மக்கள் கோரும் உள்ளூராட்சி தேர்தலை நடத்திக்காட்டுவோம்

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர்)



“மக்கள் கோரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவேண்டாமென எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுவது நகைப்புக்குரிய விடயம்”- என பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (17) புதிய அரசாங்கத்தின் புதிய வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர்.

“கடந்த அரசாங்கத்தின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்த வேண்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது, தேர்தலை நடத்தப் பணமில்லை எனக் கூறி காலத்தைக் கடத்தி இந்த நாட்டு மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் துரோகத்தை ஏற்படுத்தினார்.

ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை இந்த உள்ளூராட்சி மன்றங்களூடாக பாரிய சேவை பெற்றுக்கொள்ள முடிகிறது. அந்தச் சேவைகள் அனைத்தும் இன்று தடைப்பட்டுள்ளதாக நாம் அறிந்துள்ளோம். நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் சட்டதிட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அங்கு மக்களுக்கான சேவைகள் உள்ளூராட்சி மன்றங்களூடாக முறையாகப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

மலையக பெருந்தோட்டப் பகுதியிலுள்ள பெண்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் காணப்படுகிறது. இது போன்ற ஒரு வாய்பை கடந்த அரசாங்கம் குழிதோண்டிப் புதைத்துள்ளது. இதையெல்லாம் செய்தவர்கள் இன்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிப் பக்கமிருந்துகொண்டு பல்வேறு குளறுபடிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களின் முகத்தை உற்றுநோக்கும்போது ஒரு கலக்கமும் தயக்கமும் தெரிகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை அப்போது நடத்தியிருந்தால் மக்கள் இவர்களுக்கு தக்கபாடத்தைக் கற்பித்திருப்பார்கள். ஆகையால் தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடத்தவில்லை. மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு தோட்ட நிறுவனங்கள் பல்வேறு சேவைகளை இடைநிறுத்தியிருக்கிறது.

எனவே, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் இடமாக இந்த உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்துள்ளன.

வீதிப் புனரமைப்பு, குடிநீர் பிரச்சினை போன்ற பிரச்சினைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களூடாக தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இன்று ஒருசிலர் பரீட்சைகளையும் வரவு - செலவுத் திட்டத்தையும் காரணம் காட்டி நாம் மக்களிடம் சென்று எவ்வாறு வாக்குறுதிகள் வழங்குவதெனப் பயந்துகொண்டு தேர்தலை பிற்போட முயற்சி செய்கிறார்கள்.

நாட்டு மக்கள் இன்று ஜனநாயகத்தின் மீதும் தேர்தல் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் அரசாங்கம்தான் எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். ஆகையால் எமது அரசாங்கம் அறிவித்ததைப்போல் நிச்சயமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்திக் காட்டுவோம்”- என்றார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு வெறுமனே பரிந்துரைகளாகவன்றி நடைமுறைப்படுத்த வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

பெருந்தோட்ட மக்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் வரவு-செலவுத் திட்டத்தில் பரிந்துரைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டன. கடந்த காலங்களிலும் இவ்வாறு பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும், எதுவும் நடைமுறையில் சாத்தியமடையவில்லை. வரவு-செலவுத் திட்ட உரையில் மலையகத் தமிழர்கள் என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை மகிழ்ச்சிக்குரியதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற அமர்வில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்தார்.

வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

‘‘2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாவாக அதிகரிப்பதற்கு பரிந்துரைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் இவ்வாறு பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்தில் அதிகாரபூர்வமாகத் தீர்மானங்களை அறிவித்தார். இருப்பினும், சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ஆகவே, பரிந்துரைகள் நடைமுறைக்கு சாத்தியமாகுமா என்பது தெரியவில்லை. பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களே மீண்டும் சொல்லப்படுகிறது. இது விசனத்துக்குரியது. பெருந்தோட்டப் பகுதிகளில் வீடமைப்பு உட்கட்டமைப்புக்கு 04 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. பெருந்தோட்டத்துக்கு தனி வீடா, மாடி வீடா என்பது குறிப்பிடப்படவில்லை.

பெருந்தோட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வரவு - செலவுத் திட்டத்தில் விரிவாகக் குறிப்பிடப்படாமை வருத்தத்துக்குரியது. இருப்பினும், வரவு - செலவுத் திட்டத்தில் மலையகத் தமிழர்கள் என்று குறிப்பிட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது’’- என்றார்.

# காதலர் தினத்தை மையப்படுத்தி கண்டியில் விசேட நிகழ்ச்சித் திட்டம்







(எம்.ஏ. அமீனுல்லா)



பெப்ரவரி மாத காதலர் தினத்தை மையப்படுத்திய ‘யூத் எக்க கிளீன் வென ஆதரய பெப்ரவரிய’ எனும் பெயரில் கண்டியிலும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய இளைஞர் படை ஆகியவை இணைந்து ‘யூத் எக்க கிளீன் வென ஆதரய பெப்ரவரிய’ என்ற திட்டத்தை நாடு முழுவதும் செயற்படுத்தி வருகின்றன.

கண்டி மாவட்ட நிகழ்ச்சி கடந்த 16ஆம் திகதி காலை அதன் ஓர் அங்கமாக பெல்வுட் பியூட்டி ரிசார்ட்டின் இசைக்குழுவுடன் இசை பொழுதுபோக்கு நிகழ்ச்சி கண்டி சஹஸ் உயன திறந்தவெளி அரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கண்டி இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத்தின் தலைமையில் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ். பி. எஸ். அபேகோன் ஆகியோரின் தலைமையில் கண்டி பிராந்திய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் இளைஞர் கழக இளைஞர் தலைவர்கள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பயிற்சி நிலையங்களின் பயிலுனர்கள், பெல்வுட் பியூட்டி ரிசார்ட் பயிற்சி பெற்றவர்கள், தேசிய இளைஞர் படையின் பயிற்சி பெற்றவர்கள், பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள், பொல்கொல்ல ஸ்ரீலங்கா திறந்த பல்கலைக்கழக மாணவர்கள், சுற்றாடல் படை விமானிகள், லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், சென்.ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் பணியாளர்கள், உயர் பெண்கள் கல்லூரி மாணவிகள், வித்யார்த்தா கல்லூரி மாணவிகள், புனித அந்தோனியார் பெண்கள் கல்லூரி மாணவிகள், இளம் பத்திரிகையாளர்கள், இளம் சமூக ஆர்வலர்கள் என ஏறக்குறைய அறுநூறு இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

### மன்னாரில் கனியமணல் அகழ்வுக்கு எதிராகப் போராடும்

# சட்டத்தரணி, அருட்தந்தையர் உள்ளடங்கலாக 10 பேருக்கு நீதிமன்றம் தடையுத்தரவு


(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டமொன்று இடம்பெறலாமென்ற அடிப்படையில், இதனால் பொதுமக்களுக்கு இடையூறு, நட்டம், தொந்தரவு ஏற்படலாமென்ற வகையில் மன்னார் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட தடையுத்தரவுக்குப் பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்வதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் அரச திணைக்கள அதிகாரிகள் ஆய்வு செய்வதற்காக இரு தடவைகள் மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்த நிலையில், இரு தடவைகளும் மக்களின் ஒன்றிணைந்த எதிர்ப்பால் அரச திணைக்களங்கள் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனமும் திருப்பியனுப்பப்பட்டது.

இவ்வாறான நிலையில், நாளைய தினம் மீண்டும் குறித்த அரச திணைக்களங்கள் மற்றும் ஒரியன் மினரல் நிறுவனம் ஆய்வுக்காக மன்னார் ஓலைத்தொடுவாய் மற்றும் தோட்டவெளி பகுதிக்கு வருகை தரவுள்ள நிலையில் பொது மக்கள் அணி திரண்டு போராட்டம் மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளJ. அதன் அடிப்படையில் போராட்டக்காரர்கள் என அடையாளப் படுத்தி சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு பல்வேறு நிபந்தனைகளுடன் மன்னார் பொலிஸார் தடையுத்தரவைப் பெற்றுள்ளனர்.





குறிப்பாக, சட்டத்தரணி செல்வராஜ் டினேஸன், பிரகாஷ் மகிலா, அருட்தந்தை மார்கஸ், கிறிஸ்து நேசரத்னம், சந்திரதாஸ் ஐங்கரன், நேசன் லுஸ்தீன், அமிர்தநாதன் தட்குரூஸ், இம்மானுவேல் கலிஸ்ரன், செபமாலை பிரான்சிஸ், அன்ரூ மெக்சின் எனும் 10 பேருக்கு எதிராக தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவின் கீழ் மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போராட்டம் மேற்கொள்ளலாமெனவும் எந்த பொதுச் சொத்துகளுக்கும் தனியார் சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்தக்கூடாதெனவும் மிக முக்கியமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும் ஒரியன் மினரல் நிறுவனத்தின் செயற்பாட்டுக்கும் இடையூறு ஏற்படுத்தக்கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் தேர்தல் தொடர்பிலான பிரசார நடவடிக்கையின்போது மன்னார் மக்களுக்கு விருப்பமில்லாத கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்போவதில்லையென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பகிரங்கமாகத் தெரிவித்த நிலையில், அவர் ஜனாதிபதியான ஒரு வருட காலப்பகுதிக்குள் கனிய மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்குவதற்கான அறிக்கையை தயார் செய்வதற்காக இரண்டாவது தடவையாக அரச திணைக்களங்கள் மன்னார் மாவட்டத்துக்கு வருகைதரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரியில் இடம்பெற்ற கம்பன் விழா




(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (17) திங்கட்கிழமை பிற்பகல் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் கம்பன்விழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தன.

வைத்திய கலாநிதி சு.சி. அருளானந்தம் தம்பதியினர் மற்றும் பேராசிரியர் க.கந்தசாமி தம்பதியினரின் மங்கள விளக்கேற்றலுடன் இந்நிகழ்வு ஆரம்பமாகியிருந்தது.

நிகழ்வில் விசேட அம்சமாக கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் “இன்றைய அரசியல்வாதிகளுக்கு வழிகாட்டவல்ல பெருந்தலைவன் - வாலியே, இராவணனே, தசரதனே’ எனும் பொருளில் பட்டிமண்ற நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதில் வழிகாட்டவல்ல தலைவன் வாலியே என ந.விஜயசுந்தரம், த.கருணாகரன் ஆகியோரும் இராவணனே என ஐ.கதிர்காமசேகரன், வே.ஞானசம்பந்தன் ஆகியோரும் தசரதனே என தி.வேல்நம்பி மற்றும் அ.வாசுதேவா ஆகியோரும் விவாதித்திருந்தனர்.

நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையில் பாடசாலைக்குள் நுழைந்த பொலிஸ் உத்தியோகத்தர்

## மாணவிகளுடன் தவறாக நடக்க முயற்சி

(யாழ். நிருபர்)

முல்லைத்தீவு, மல்லாவி பொலிஸ் நிலையப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் முல்லைத்தீவு யோகபுரம் பாடசாலைக்குள் மதுபோதையில் சிவில் உடையில் புகுந்து மாணவிகளை மலசலகூடத்துக்கு வருமாறு அழைத்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட முற்பட்டபோது கையும் களவுமாக சிக்கியுள்ளார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று முன்தினம் மாலை மூன்று மாணவிகளுடன் இவ்வாறு தவறாக நடக்க முற்பட்டார். இதன்போது மாணவிகள் விடயத்தை வெளியே கூறியதன் பின்னர் அங்கிருந்தவர்கள் பொலிஸ் உத்தியோகத்தருடன் முரண்பட்டனர்.

இச்சம்பவம் குறித்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மதுபோதையில் இருந்தார் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட வேண்டுமென்றும், பொலிஸ் தரப்பு குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தப்பிக்க வைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடாதென்றும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

# வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்கான பிரதேசமட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



(பு.கஜிந்தன்)

2023 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் சம்பந்தமாக உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் (TOT) நிகழ்ச்சித்திட்டம் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனனின் தலைமையில் நேற்று முன்தினம் (17) காலை 09.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான தெளிவூட்டல்களை தேர்தல்கள் உதவி ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் முன்வைத்தார்.

இந்நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நீதி) சட்டத்தரணி சிந்தக குலரத்ன, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ்.அச்சுதன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மின் கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் பலி!

(சிவகுமார் திவியா)

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து தொடர்பாகத் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் மாலை குறித்த நபரும் மற்றொருவரும் பறயநாலங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி மோட்டார்சைக்கிளில் சென்றுள்ளனர்.

இதன்போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகிலிருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அதில் பயணித்த மற்றைய நபர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த நிமல் (வயது 35) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்க நிர்வாக சபைக் கூட்டம்

(முல்லைத்தீவு நிருபர்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23) காலை 09 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் இளஞ் சைவப்புலவர் பரீட்சை செயற்பாடுகள், சிவதீட்சை வழங்கல் தொடர்பான விடயம், பரீட்சைக்கான நேரடி வகுப்புகளை நடத்துதல். கணக்கறிக்கை சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதனால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அகிலஇலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

**8 அணிகள்**
**15 நாட்கள்**
**15 போட்டிகள்**
**ஒரு சம்பியன்**

# ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணம் இன்று பாகிஸ்தானில் ஆரம்பம்

**29 வருடங்களின் பின் பாக். மண்ணில் ஐ.சி.சி. தொடர்**

**பாகிஸ்தானின் 03 மைதானங்களிலும் டுபாயிலும் போட்டிகள்**

**இந்தியாவின் இறுதிப்போட்டி தெரிவை பொறுத்து மைதானம் தீர்மானம்**

**கன்னி சம்பியன்ஸ் கிண்ணத்தில் களமிறங்கும் ஆப்கானிஸ்தான்**



CHAMPIONS TROPHY 2025 SCHEDULE

| DATE | TIME (IST) | MATCH | VENUE |
|---|---|---|---|
| 19 FEB 2025 | 2.30 PM | PAK vs NZ | KARACHI |
| 20 FEB 2025 | 2.30 PM | BAN vs IND | DUBAI |
| 21 FEB 2025 | 2.30 PM | AFG vs SA | KARACHI |
| 22 FEB 2025 | 2.30 PM | AUS vs ENG | LAHORE |
| 23 FEB 2025 | 2.30 PM | PAK vs IND | DUBAI |
| 24 FEB 2025 | 2.30 PM | BAN vs NZ | RAWALPINDI |
| 25 FEB 2025 | 2.30 PM | AUS vs SA | RAWALPINDI |
| 26 FEB 2025 | 2.30 PM | AFG vs ENG | LAHORE |
| 27 FEB 2025 | 2.30 PM | PAK vs BAN | RAWALPINDI |
| 28 FEB 2025 | 2.30 PM | AFG vs AUS | LAHORE |
| 1 MAR 2025 | 2.30 PM | SA vs ENG | KARACHI |
| 2 MAR 2025 | 2.30 PM | NZ vs IND | DUBAI |
| 4 MAR 2025 | 2.30 PM | SEMI-FINAL 1 | DUBAI |
| 5 MAR 2025 | 2.30 PM | SEMI-FINAL 2 | LAHORE |
| 9 MAR 2025 | 2.30 PM | FINAL | LAHORE/DUBAI |

**இலங்கை இல்லாத முதல் சம்பியன்ஸ் கிண்ணம்**

**மொத்த பரிசுத் தொகை 53% அதிகரிப்பு**

**சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 2.24 மில்லியன் அமெரிக்க டொலர்கள்**

*(அகீல் சிஹாப்)*

கிரிக்கெட் உலகின் பலம்வாய்ந்த 08 அணிகள் பங்கேற்கும் மினி உலகக்கிண்ணம் என அழைக்கப்படும் ஒன்பதாவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் 08 வருடங்களின் பின் இன்று கோலாகலமாக பாகிஸ்தானில் ஆரம்பமாகிறது.

பல தடைகளுக்கு மத்தியில் 29 வருடங்களுக்கு பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் பாகிஸ்தான் மண்ணில் ஓர் ஐ.சி.சி. தொடர் நடைபெறவுள்ளது. எனினும் பி.சி.சி.ஐயின் தனித்துவமான உறுதிப்பாட்டின் காரணமாக இந்திய அணியின் போட்டிகள் மாத்திரம் டுபாயில் நடைபெறுகின்றன.

முதல்முறையாக இந்த தொடர் 1998ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்றது. இதில் வெஸ்ட் இண்டீஸ் அணியை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. தென்னாபிரிக்கா வென்ற முதல் ஐ.சி.சி. தொடர் என்பது இதுவாகும்.

இதைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டு நியூஸிலாந்து சம்பியன் பட்டமும் 2002ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. இறுதிப் போட்டி மழை காரணமாக தடையான நிலையில் ரிசர்வ் டேவில் அறிவிக்கப்பட்டது. அப்போதும் மழை குறுக்கிட்டதால் இந்தியாவும் இலங்கையும் சம்பியன் பட்டத்தை பகிர்ந்து கொண்டன.

2004ஆம் ஆண்டு இங்கிலாந்தை வீழ்த்தி வெஸ்ட் இண்டீஸ் அணியும் 2006ஆம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் அணியை வீழ்த்தி அவுஸ்திரேலியாவும் 2009ஆம் ஆண்டு நியூஸலாந்தை வீழ்த்தி மீண்டும் அவுஸ்திரேலியாவும் 2013ஆம் ஆண்டு இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியாவும் 2017ஆம் ஆண்டு இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தானும் சம்பியன் பட்டத்தை வென்றன.

இந்நிலையில், 08 ஆண்டுகளின் பின் மீண்டும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இன்று ஆரம்பமாகிறது. தொடரில் பங்கேற்கும் 08 அணிகளும் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. குழு 'ஏ'யில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் நியூஸிலாந்து அணிகளும் குழு பியில் அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அணிகளும் உள்ளன.



12 லீக் போட்டிகளும் அரையிறுதி, இறுதி என மொத்தமாக 15 போட்டிகள் நடைபெறவுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் எதிரணியுடன் தலா ஒரு போட்டி வீதம் மொத்தமாக 03 போட்டிகளில் மோதும். இதில் இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதிபெறும். இன்று முதல் மார்ச் 02ஆம் திகதிவரை லீக் போட்டிகளும் மார்ச் 04 மற்றும் 05ஆம் திகதிகளில் அரையிறுதி போட்டிகளும் மார்ச் 09ஆம் திகதி இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது. இதில் இறுதிப்போட்டிக்கான மைதானம் இந்திய அணியின் இறுதிப்போட்டி தெரிவை பொறுத்து தீர்மானிக்கப்படும்.





இன்று கராச்சியில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் தொடரை நடத்தும் பாகிஸ்தான் - நியூஸிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. அனைத்து போட்டிகளும் இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும். தொடரின் மொத்த பரிசு தொகை 6.90 மில்லியன் டொலர்களாகும். இது 2017ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தொகையைவிட 53 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு 2.24 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இறுதிப்போட்டியில் தோல்வியடைந்து 2ஆவது இடம் பிடிக்கும் அணிக்கு 1.12 மில்லியன் டொலர்களும் அரை இறுதி சுற்றில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் தலா 560,000 டொலர்களும் 05, 06ஆவது இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா 350,000 டொலர்களும் 07, 08ஆவது இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா 140,000 டொலர்களும் லீக் சுற்றில் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெறும் அணிக்கு 34,000 டொலர்களும் வழங்கப்படவுள்ளது. மேலும் தொடரில் கலந்து கொள்வதற்காக 08 அணிகளுக்கும் தலா 125,000 டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் அணி இல்லாத முதல் சம்பியன்ஸ் கிண்ணத் தொடராகவும் இது அமைந்துள்ளது. ஐ.சி.சி. ஒருநாள் அணிகளின் தரவரிசையில் இலங்கை அணி தற்போது ஐந்தாமிடத்தில் காணப்பட்டாலும், கடந்த 2023 ஐ.சி.சி. உலகக்கிண்ணத் தொடரின் இறுதி புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி முதல் 07 இடங்களுக்குள் முன்னேற தவறி 09ஆவது இடத்தை பிடித்ததால் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தது.

எனினும், உலகக்கிண்ணத் தொடரில் ஆறாமிடத்தை பிடித்த ஆப்கானிஸ்தான் அணி முதல் முறையாக சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆடவுள்ளது. தற்போது பலம்வாய்ந்த அணிகளை வீழ்த்திவரும் ஆப்கானிஸ்தான் அணி எதிரணிக்கு சவாலாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.










Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7